# ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு பாதுகாப்பு ஏற்பாடு


Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15    ★★

**ஈழநாடு சந்தா**
(தபால் மூலம் விநியோகம்)

| | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 22-00 | ரூ. 4-50 |
| 6 மாதம் | ரூ. 42-00 | ரூ. 8-00 |
| ஒரு வருடம் | ரூ. 82-00 | ரூ. 15-00 |

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 300
தேசிய தினசரி

**ஈழநாடு சந்தா**
(ஆள்மூலம் விநியோகம்)

| | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|
| மூன்று மாதம் | ரூ. 18-00 | 4-00 |
| ஆறு மாதம் | ரூ. 34-00 | 7-50 |
| ஒரு வருடம் | ரூ. 66 00 | 14-00 |

யாழ்ப்பாணம் கார்த்திகை 24 ஷவ்வால் 9 புதன்கிழமை (9 12-70)


## உதவி ஆணையாளர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

பொதுத்தராதரப் பத்திர (ஜி ஸி ஈ) பரீட்சைக்கான விசேஷ பந்தோபஸ்து ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக பரீட்சைப்பகுதி உதவி ஆணையாளர் திரு வி. சதாசிவம் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்,

பரீட்சைகள் பத்திரமாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் பற்றி அவர் பரீட்சை அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்தினார்.

பரீட்சைக்குரிய கேள்வித்தாள்களைப் பத்திரமாக பரீட்சை நடைபெறும் இடங்களுக்கு எடுத்துசெல்ல வேண்டியதின் அவசியத்தை அவர் பரீட்சை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். கேள்வித்தாள்களை பத்திரமாக கார்கள் மூலமே கொண்டு செல்ல வேண்டும் என்றும் சைக்கிள்கள் மூலமோ பொது மக்கள் பார்வையில் படும் வகையிலோ கொண்டு போகப்படாதென்றும் அவர் எச்சரித்தார்.

பரீட்சை அதிகாரிகள் கேள்வித்தாள்களைத் தபாற் கந்தோர்களிலிருந்து தமது இல்லங்களுக்கும், இல்லங்களிலிருந்து பரீட்சை நடைபெறும் மண்டபங்களுக்கும் பந்தோபஸ்துடன் எடுத்துச் செல்வதற்கும், பின்னர் பரீட்சை நடைபெறும் மண்டபங்களிலிருந்து வீடுகளுக்குத் திரும்பும்போதும் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது பற்றி உதவி ஆணையாளர் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. சி. சுந்தரலிங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பரீட்சை அதிகாரிகள் பத்திரமாகப் போய்வருவதற்கும், பரீட்சைகள் அசம்பாவிதமின்றி நடைபெறுவதற்கும் தகுந்த பந்தோபஸ்து வசதிகளை ஏற்படுத்தித்தருவதாகப் பொலிஸ் அதிபர் வாக்குறுதியளித்ததாகத் தெரிகின்றது. உதவி ஆணையாளர் திரு. சதாசிவம் நேற்றே கொழும்பு திரும்பினார்.

......

## திருக்கார்த்திகை உற்சவம்

ஆனைக்கோட்டை, செவ்.

ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயத்தில் திருக்கார்த்திகைத் தினத்தன்று விசேட அபிஷேகம், ஆராதனை, பூஜைகள் நடைபெற உள்ளன. பஜனைகோஷ்டியினரின் திருமுறைப் பண்ணிசையும் மேளவாத்தியக் கச்சேரியும் நடைபெறவுள்ளன.

### தமிழ்ப்பகுதிகளில்

# சிங்களம் நீதிமன்ற மொழியானால் போராட்டம் ஆரம்பமாகும்

## எஸ். ஜே. வி. எச்சரிக்கை

(நமது நிருபர் மு சின்னத்துரை)

கொழும்பு, செவ்

**தமிழ்ப்பகுதிகளில் சிங்களம் என்று நீதிமன்றமொழியாகிறதோ அன்று போராட்டம் ஆரம்பமாகும்' என்று தமிழரசுக்கட்சித் தலைவரும் காங்கேசன்துறைத் தொகுதி எம். பி.யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எச்சரித்துள்ளார்.**

திரு. செல்வநாயகம் இன்று விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:

'நிதிஅமைச்சர் டாக்டர் [illegible] பதே எமது கட்சியின் கொள்கை; இனியே டாக்டர் பெரேராவும் அவரது கட்சியும் [illegible]னர் கூறிவந்தினர்.

சிங்களம்பேசாத மக்கள் மீது சிங்களத்தைத் திணிப் [illegible] முடியாதிருப்பதாகவும் உதவிநீதியமைச்சர்சொல்லியுள்ளார். ஆயினும் விரைவில் இலங்கை முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களில் நீதிமன்றச்சட்டம் அமுல்படுத்தப்படுமென அவர் உறுதி [illegible]

## மட்டக்களப்பு நகரமேயர் தேர்தலில் தோல்வியுற்றார்

### 12 இடத்தில் தமிழரசு ஆதரவாளர் வெற்றி?

மட்டக்களப்பு, செவ்வாய்

**மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தலில் தற்போதைய மேயர் திரு. ஜே. எல். திஸவீரசிங்கம் தோல்வியுற்றார்**

**19 வட்டாரங்களைக் கொண்ட இந்தச் சபையில் இம்முறை ஏறத்தாழ 12 வட்டாரங்களில் தமிழரசு ஆதரவாளர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்**

மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தல் நேற்று நடைபெற்றது. 19 வட்டாரங்களைக் கொண்ட இந்தச் சபையில் முதலாம் வட்டார அங்கத்தவர் ஏற்கனவே போட்டியின்றி வெற்றி பெற்றிருந்ததால் 18 வட்டாரங்களுக்கு மட்டுமே [illegible]

### முன்னாள் எம். பி.யின் மகன் மீதான

## 'ஸ்ரீ' வழக்கு தள்ளுபடி

(நமது நிருபர் கு வி மகாலிங்கம்)

யாழ்ப்பாணம், புதன்

தமிழிலும் சிங்களத்திலும் ஸ்ரீ இலக்கம் பொறிக்கப்பட்ட காரை ஓட்டிச் சென்றதாக ஊர்காவற்றுறைத் தொகுதி முன்னாள் எம். பி, திரு. வி. நவரத்தினத்தின் புதல்வன் ராஜ்மோகனுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது

உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. செனிவ[illegible]

இவ்வழக்கில் தமிழிலும் சிங்களத்திலும் ஸ்ரீ இலக்கம் பொறிக்கப்பட்டகாரை உபயோத்ததாகவும். லைசென்ஸ் இன்றி காரைச் செலுத்திச் சென்றதாகவும் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

முதலாவது குற்றச்சாட்டைத் தள்ளுபடி செய்த மாஜிஸ்திரேட் இரண்டாவது குற்றச்சாட்டான லைசென்ஸ் இன்றி கார் ஓட்டியதற்கு ரூபா 15 முடிக்குரிய செலவு வழங்கும்படி தீர்ப்பளித்தார்

எதிரி சார்பில் புறக்டர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட இந்தச் சபையில் முதலாம் வட்டார அங்கத்தவர் ... போட்டியின்றி வெற்றி பெற்றிருந்ததால் 18 வட்டாரங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெற்றது. சுமார் 49 பேர் போட்டியில் ஈடுபட்டார்கள்.

5-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட இப்போதைய மேயர் திரு திஸவீரசிங்கம் திரு. அம்பலவாணர் என்பவரிடம் தோல்வியுற்றார் 15-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட துணைமேயர் தர்மசேன வெற்றியீட்டினார். ஆறு வட்டாரங்களில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்கள் மூன்று வட்டாரங்களில் வெற்றியீட்டியுள்ளனர்.

விபரம் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்: ஜனுப் எம் பாருக் சின்னலெப்பை போட்டியின்றித் தெரிவு

2-ம் வட்டாரம்: வே மாணிக்கராசா

3-ம் வட்டாரம்: சு தோணிமுத்து

4-ம் வட்டாரம்: நா சிவநாதன்

5-ம் வட்டாரம்: இ அம்பலவாணர்

6-ம் வட்டாரம்: லூ சவரி இன்னாசி முத்து

7-ம் வட்டாரம்: எப் ஆர் ஜே ஜெயசிங்கம் ருகல்

8-ம் வட்டாரம்: பொ கீர்த்திசிங்கம்

9-ம் வட்டாரம்: ந இரா தர்மசேன

10-ம் வட்டாரம்: இ தியாகராசா

11-ம் வட்டாரம்: சாம் வி கதிர்காமத்தம்பி

12-ம் வட்டாரம்: குருஸ் குழந்தைவேல்

13-ம் வட்டாரம்: எப்

14-ம் வட்டாரம்: சா

15-ம் வட்டாரம்: எஸ் திருநாவுக்கரசு

16-ம் வட்டாரம்: க அந் மச்சந்திரன்

17-ம் வட்டாரம்: கே ஓ சிவ கதிரவேலு

18-ம் வட்டாரம்: க பிரி தம்பிமுத்து

19-ம் வட்டாரம்: ஜனுப் லெப்பை.

"நிதிஅமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா தமிழரசுக்கட்சி தனிச்சிங்களச்சட்டத்தை ஏற்றுக் கொண்டு விட்டதாகக் கூறியுள்ளார். ஆனால் நாம் அச்சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. நாம் இலங்கையர் என்ற காரணத்தினால் நடைமுறைச் சட்டத்துக்கு நிர்ப்பந்திக்கப்படுவது உண்மைதான். இதனால்சிங்களச்சட்டத்தை ஏற்றுக் கொண்டோம் என்பது பொருளல்ல. தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமத்துவம் ஏற்பட வேண்டுமென் மீது சிங்களத்தைத் திணிப்பது தமது நோக்கமல்ல என்று உதவிநீதிமந்திரி கூறியிருந்தார். தமது மொழியிலேயே வாதிட உரிமை உண்டென்றும் அவர் கூறியுள்ளார். ஆனால் அதேநேரத்தில் நீதிமன்றச் சட்டத்தையும் அமுல் நடத்தக் கடமைப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சகல நீதிமன்றங்களிலும்சிங்களதட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவற்றில் கஷ்டங்கள் இருப்பதினாலேயே உடனடியாக நீதிமன்றச் சட்டத்தை அமுல்படுத்தப்படுமென அவர் உறுதி தெரிவித்திருக்கிறார். இதன்படி வடக்கு, கிழக்கில் சிங்களம் நீதிமன்ற மொழியாகும், எவ்வாறாலும் தமிழர்மீது சிங்களம் திணிக்கப்படுகிறது, சிஙகளப்பகுதிகளில் சிங்களம் நீதிமன்ற மொழியாக இருப்பதுபோல தமிழ்ப்பகுதிகளில் தமிழே நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும், தமிழ்ப்பகுதிகளில் என்று சிங்களம் நீதிமன்ற மொழியாகிறதோ அன்று போராட்டம் ஆரம்பமாகும்.

... ரத்தினாவினால் தாக்கல்செய்யப்பட்ட இவ்வழக்கை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஏ. எவ் எவ். ஏ டயஸ் விசாரணைசெய்தார்.

எதிரி சார்பில் புறக்டர் ஆர். விசுவநாதன், புறக்டர் வி. பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார்.

## வட்டுக்கோட்டைத் தேர்தல் ஆட்சேபவழக்கு

# எதிர் மனுதார் சார்பில ஆட்சேபம்கிளப்பப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்.

முறையான சத்தியக் கடதாசி அல்லவென்றும், மனுவில் விபரங்கள் முழுமையாக இல்லை என்றும் வட்டுக்கோட்டை தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணையில் எதிர் மனுதாரின் வழக்கறிஞர் எஸ். சர்வானந்தா ஆட்சேபனை தெரிவித்து வாதாடினார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் தேர்தல் நீதிபதி பண்டித குணவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் வட்டுக் கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினராக திரு. ஆ தியாகராசா தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து சின்னத்தம்பி ஆனந்த குமாரசாமி என்பவர் தாக்கல் செய்த மனுமீதான விசாரணை நடைபெற்று வருகிறது'

மனுதார் சார்பில் அட்வக்கேட் எஸ் திருச்செல்வம் கியூ சி, அட்வக்கேட் எஸ் கதிரவேலுப்பிள்ளை, அட்வக்கேட் குமரசட் தம்பையா, அட்வக்கேட் எஸ் சிவானந்தன், அட்வக்கேட் எஸ் சிவ பாக்கியநாதன் ஆகியோரின் உதவியுடனும், புறக்டர் கே சொக்கலிங்கத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

எதிர் மனுதார் சார்பில் அட்வக்கேட் எஸ் சர்வானந்தா, அட்வக்கேட் ரி சுந்தரலிங்கம், அட்வக்கேட் ரி துரையப்பா ஆகியோரின் உதவியுடனு புறக்டர் எஸ் கே பொன்னம்பலத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

எதிர் மனுதாரின் வழக்கறிஞர் சர்வானந்தா வாதாடியதைத் தொடர்ந்து மனுதாரின் வழக்கறிஞர் திருச்செல்வம் சட்ட நூல்களை ஆதாரங்காட்டி நீண்ட நேரம் மனுதார் சார்பில் வாதாடினார். விசாரணையைப்பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் மக்கள் திரண்டிருந்தனர்

விசாரணை இன்று காலைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

......

## திருக்கேதீச்சர தலபுராணம்

யாழ்ப்பாணம், புதன்

சிவஸ்ரீ கு. வைத்தீஸ்வரக் குருக்கள் எழுதிய திருக்கேதீச்சர புராணம் என்னும் தலபுராணம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையன்று திருக்கேதீச்சரத்தில் வெளியிடப்படவிருக்கிறது. திருவாளர்கள் த. குமாரசாமிப்பிள்ளை, சி வி நாசித்தம்பி ஆகியோர் இவ்விழாவில் உரைநிகழ்த்துவார்கள்.

# ஆட்சிமன்றத்தில் திரைப்பட கூட்டுத்தாபன மசோதா

## தமிழ்ப்படத்தயாரிப்புக்கு விசேஷ ஊக்கம்

கொழும்பு, செவ்

**உள்நாட்டுத் திரைப்படத் தயாரிப்புகளுக்கும் உள்ளூர்க் கலைஞர்களுக்கும் ஊக்கமளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்ட அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபன மசோதா இன்று ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது**

தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ் பெரேரா இன்று காலை இம்மசோதாவை ஆட்சிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

வெளிநாட்டு படங்களின் இறக்குமதியையும் விநியோகத்தையும் பொறுப்பேற்பதும் உள்நாட்டுசிங்கள, தமிழ் திரைப்படத் தயாரிப்புகளுக்குத் தொழில்நுட்ப, நிதி வசதிகளைச் செய்து, கொடுத்து திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதும் இத்திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முக்கிய நடவடிக்கைகளாக இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மசோதாவின் படி 10 பேர் இத்திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் அங்கம் வகிப்பர்' தலைவரும், மற்றும் மூன்று அங்கத்தவர்களும் தகவல் ஒலிபரப்பு கலாச்சார பகுதிகளைச் சேர்ந்தவர்களாகஇருப்பர். மிகுதி 6 பேரை தகவல் ஒலிபரப்பு அமைச்சர் நியமிப்பார். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இருவரையும் திரைப்படத்துறையில்அனுபவமிக்க இருவரையும் அமைச்சர் நியமிப்பார்.

வெளிநாட்டுப்படங்களின் தாக்கங்களினால் உள்நாட்டு படத் தயாரிப்புகள் பாதிக்காதபடி சகல வசதியையும் உதவியையும் உள்நாட்டுத் தயாரிப்புகளுக்கு வழங்க இத்திரைப் படக் கூட்டுத்தாபன மசோதா வழிவகைகளைச் செய்து கொள்ளும்.

திரைப்படக் கூட்டுத்தாபன ஆரம்ப வேலைகளுக்கு ஒருகோடி ரூபா ஒதுக்கப்படுமென அமைசர் தெரிவித்தார். சோஷலிஸநாடுகளிலிருந்தும் தரமான திரைப் படங்களை இறக்குமதிசெய்வதெனவும், தமிழ்த் திரைப் படத் தயாரிப்புகளுக்கு இக் கூட்டுத்தாபனம் விசேஸ உதவிகளை வழங்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

## நான்கு எதிரிகளுக்கும் நாலாண்டுக் கடூழியம்

### யாழ். சுங்கஇலாகா கொள்ளை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சுங்க இலாகா கொள்ளை வழக்கில் எதிரிகள் நால்வருக்கும் தலா 4வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தீர்ப்புத் தெரிவிக்கப்பட்டதும் 4-வது எதிரியின் தாயார் கோர்ட்டில் மயங்கி விழுந்தார்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஜே. எவ். ஏ. டயஸ் நேற்று இவ்வழக்கில் தீர்ப்பளித்தார்.

எதிரிகள் நால்வரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர் 1969ம் ஆண்டு செப்டம்பர் 6ந்திகதி ரஞ்சித்சல்கடுவ தர்மதாசா, ரஞ்சித் பெரேரா, தயானந்தா ஆகிய நால்வரும் யாழ்ப்பாணம் சுங்க இலாகாவை உடைத்ததாகவும் சேலைகளை எடுத்துச் சென்றதாகவும் அங்குள்ள ஜீப் வண்டியை எடுத்துச் சென்றதாவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் ஆஜரான புறக்டர் ஏ. அன்ரனி இந்த நால்வரும் இதற்கு முன்குற்றப் படவில்லையென்றும் அவர்கள் மீது கருணை காட்டும்படியும் கோரினார்.

இதுபாரதூரமான செயல் என்று குறிப்பிட்ட நீதிபதி நால்வருக்கும் தலா நான்கு வருடக்கடூழியச்சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## 800 தாதிமார் விரைவில் நியமிக்கப்படுவர்

கொழும்பு, செவ்வாய்

தென்கிழக்கு ஆசியவிவசாய ஆராய்ச்சி பயிற்சி நிலையமொன்று இலங்கையில் நிறுவப்படவுள்ளது மந்திரிசபை இதற்கான அங்கீகாரத்தை இன்று அளித்தது.

பிரதமர் திருமதி சிறிமாவோ தலைமையில் இன்று கூடிய மந்திரிசபை கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி சுபசிங்கா சமர்ப்பித்த போலந்தின் உதவியுடன் இங்கு பருத்திநெசவு நிலையத்தை நிறுவுவதற்கான திட்டத்தையும் ஏற்றுக் கொண்டது.

800 புதிய தாதிகளைச் சேர்த்துக் கொள்வதற்கும் மந்திரிசபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாக். தேர்தல்

# இருகட்சி அரசியல் பரிணமிக்குமா?

கராச்சி, டிச. 8

பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் இருகட்சி அரசியல் முறையொன்று நிச்சயமாக உருவாகிவருவது வெளிப் படையாகியுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானில் பெருவாரியான இடங்களில் ஷேக் முஜிபுர் ரகுமானின் அவாமி லீக் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

அதுபோன்றே மேற்குப் பாகிஸ்தானில் திரு சுல்பிகார் அலிபுட்டோவின் மக்கள்கட்சி பெரும்பான்மை இடங்களைப்பிடித்திருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் கடைசியாக வெளியான முடிவுகளின்படிஒருதொகுதியைவிட மற்ற இடங்களில் எல்லாம்அவாமிலீக் வெற்றி பெற்றுள்ளது.

கடைசியாகக் கிடைத்த முடிவுகளின்படி 60 இடங்களில் அவாமிலீக் வெற்றி பெற்றுள்ளது. ஏனையஇடங்களிலும் முன்னணி வகிக்கின்றது. மேற்குப்பாகிஸ்தானில் 84 முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் 48 தொகுதிகளை மக்கள் கட்சி கைப்பற்றியது.

(3-ம் பக்கமும் பார்க்க)

## விரைவில் பத்திரிகைக் கவுன்சில்

கொழும்பு, செவ்வாய்

பத்திரிகைக்கவுன்சில் விரைவில் நிறுவப்படும் என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேரா இன்று ஆட்சிமன்றத்தில் அறிவித்தார், இதற்கான மசோதா தயாரிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

......

## பத்து வயதுச் சிறுவன் சமாதிக் கல்லுக்கு பலி

பாணந்துறை, செவ்

பத்துவயதுச் சிறுவன்மேல் நினைவுசின்னம்ஒன்றின்மேல் இருந்த சமாதிக் கல்லு விழுந்ததனால்நெரிக்கப்பட்டு மரணமானான்.

பாணந்துறையைச் சேர்ந்த எஸ் ஜே. காமினி என்ற இச் சிறுவன் வேறு சில சிறுவர்களோடு மயானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுதே அங்கு நிறுவப்பட்டிருந்த ஞாபகச்சின்னம் ஒன்றின்மேல் இருந்த கல்லொன்று தவறி சிறுவன் தலையின்மேல் விழுந்தது.

அயலில் உள்ளவர்கள் பாணந்துறை வைத்தியசாலைக்கு இச் சிறுவனை எடுத்துச் சென்றார்கள், அங்கு சிகிச்சையளிக்கு முன்னரே சிறுவன் மரணமானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: கே. எச். பி ஜெயசேகரா, 278, காங்கேசன்துறை வீதி, சிவன்கோவில் சந்தி, யாழ்ப்பாணம். 2557

### விற்பனைக்கு

நயினதீவிலுள்ள பள்ளிவாசலுக்கு அண்மையில் சுமார் 25 பரப்பு வருமான தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பென்சி பெலஸ், மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2554

### பயிற்சி

மோட்டார் றிவைண்டிங் தமிழில் பயிற்சி அளிக்கப்படும். விபரங்களுக்கு: இன்டஸ்றியல் கிருவ்ஸ் இன்ஸ்ரிரியூட், 443/5, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 2553

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 9—12—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 பெண்ணுலகம், 7-00 திரைகானம், 7-15 சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.

## அறிவித்தல்

சாவகச்சேரி புனித விக்ரோரியார் கோவில் நிதிக்காக யாழ். றீகல் படமாளிகையில் 29-11-70ல் நடைபெறவிருந்த 'அரசிளம்குமரி' படக்காட்சி மழை காரணமாக நடைபெறாததால் 10-12-70 வியாழன் பி. ப. 1 மணிக்கும் 4 மணிக்கும் நடைபெறும். முந்திய பிரவேசச்சீட்டுகள் செல்லுபடியாகும்.

சுவாமி S. S. வில்லவரசிங்கம் 2586

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

சாய்ந்தமருது, செவ்.

அம்பாறை மாவட்ட கச்சேரியால், அம்பாறை மாவட்டத்துக்குட்பட்ட மென்பந்து கிரிக்கட் கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அம்பாறை சன்வெலி கிரிக்கெட் கழகம் வெற்றிபெற்றது; அக்கரைப்பற்று கிரிக்கெட் கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

அம்பாறை மாவட்டத்துக்குட்பட்ட 12 கிரிக்கெட் கழகங்கள் பங்கு பற்றிய இச்சுற்றுப்போட்டி அம்பாறை பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று மென்பந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும், அம்பாறை சன்வெலி மென்பந்து கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற இறுதிப்போட்டியில் சன்வெலி கழகம் வெற்றி பெற்று சாம்பியனானது.

## நாடகப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

சித்தங்கேணி சிவச்செல்வி கலாமன்றத்தினர் நாடகத் தமிழுக்கு விழா எடுக்கும் முகமாக எதிர்வரும் தமிழர் திருநாளான தைப்பொங்கற் திருநாளன்று யாழ். மாவட்ட ரீதியில் நாடகப் போட்டி ஒன்றினை நடாத்தவிருக்கின்றனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் யாழ். மாவட்ட நாடகப்போட்டிக்குரிய இறுதிப் போட்டியில் முதலாவது இடத்தைப்பெறும் நாடகத்துக்குத் தங்கப்பதக்கமும் இரண்டாம் மூன்றும் இடங்களைப்பெறும் நாடகங்களுக்கு வெள்ளிப்பதக்கங்களும் பரிசில்களாக வழங்கவிருக்கிறார்கள். நாடகத்துக்குரிய நேரம் 45 நிமிடமாக அதிகரிக்கப்பட்டுள்ளது

## கிளிநொச்சிப் பட்டண சபை ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி வியாபாரக் குத்தகை விளம்பரம்

### குத்தகைக்காலம் 1-1-1971 தொடக்கம் 31-12-1971 முடியும்வரை

பரந்தன் சந்தை மைதானத்தில் ஆட்டிறைச்சிக் கடை ஒன்றும், மாட்டிறைச்சிக் கடை ஒன்றும் அமைத்து 1-1-1971 தொடக்கம் 31-12 1971 வரையிலான காலத்துக்குக் குத்தகையாக எடுத்து (அத்தியாயம் 272) கசாப்புச் சட்டத்திற்கு அமைய இறைச்சி விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப்பணம் ரூபா 200/- கேள்விப் பத்திரப் பணம் (திருப்பிக் கொடுபடமாட்டாது) ரூபா 10/- செலுத்தி 17-12-70 பிற்பகல் 3-00 மணிவரை இச்சபை அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி நிபந்தனைகள் விண்ணப்பஞ் செய்வதின் பேரிலோ அன்றி நேரிலோ பட்டணசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

ச. சு. முருகேசு,
தலைவர்,
பட்டணசபை,
கிளிநொச்சி.

பட்டண சபை அலுவலகம்,
கிளிநொச்சி,
4-12-70. 2587

## 'பேணி வளர்ப்பது மக்கள் கடமை'

பருத்தித்துறை, செவ்

"இன்று நாட்டு மக்களுக்குக் கிடைத்துள்ள வெற்றியைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமாயின் சகல முற்போக்குச் சக்திகளையும் அணிதிரட்டி இன்றைய அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்"

இவ்வாறு வழக்கறிஞர் திரு. எஸ். ஜெயசிங்கம் பருத்தித்துறை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கப் பொதுக் கூட்டத்திற் பேசும் போது குறிப்பிட்டார். பருத்தித்

## 'திருமலை கைத்தொழில் பிரதேசமாகும்'

திருக்கோணமலை செவ்

'திருக்கோணமலை துறைமுகத்தைச் சுற்றியும் அதனையடுத்தபகுதிகளிலும் மூலப்பொருட்கள் உள்ளன ஆதலால் திருக்கோணமலைத் துறைமுகப்பகுதியும் அதன் அருகாமையிலுள்ள இடங்களும் சில காலத்தின்பின் கைத்தொழிற் பிரதேசமாக விளங்கலாம். இப்போதிருந்தே இங்குள்ளவர்களுக்கு புதிய கைத்தொழில்களில் பயிற்சியளிக்க வேண்டும்.

திருக்கோணமலைப் பகுதியின் முன்னைய அரசாங்க அதிபர் திரு. சோமபால குணதீரா தனது 1968-69க்கான நிர்வாக அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

மூலப் பொருள்கள் இப்பகுதியில் காணப்படுவதால் இங்கு பட்டப்படிப்புக்கான ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவுவதிலும் பார்க்க ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை நிறுவுதலே நன்மை பயப்பதாகும். இப்பகுதியில் எவ்விடத்திலும் இங்குள்ள மாணவர்கள் தொழில்கல்வியைப் பெற வாய்ப்பில்லை, திருக்கோணமலையில் ஒரு கனிஷ்ட தொழில்நுட்ப நிலையத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை 1967-ம் ஆண்டு கோரப்பட்டு அதற்கு அரசாங்கமும் அங்கீகாரம் வழங்கியது. இந்த நிலையத்தை விரைவில் நிறுவ வேண்டும்.'

திரு. சோமபால குணதீர தற்போது கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவராகவும், சிறு கைத்தொழில்களின் அதிபராகவும் கடமையாற்றுகிறார்.

## புதிய நிர்வாகம்

முசலி, செவ்வாய்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மனுவராயன் கட்டையடம்பன் கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு வே விசுவாசம், தலைவர்: திரு ப அந்தோனி, காரியதரிசி: திரு ரா செபஸ்தியான், தனாதிகாரி: திரு ம பறுனாந்து, உபதலைவர்: திரு ப சந்தியோகு, உபகாரியதரிசி: திரு மா சந்தான், திருவாளர்கள்: ரா இராசேந்திரம், வி சவாந்து ம சூசை, செ செஸ்தியான், [illegible] இம்மனுவல் ஆகிய ஐவரும் நிர்வாக சபை [illegible] தெரிவு [illegible]

0 0 0

## ஓய்வு பெறும் கலைஞரான ஆசிரியர்

வதிரியைச் சேர்ந்த திரு எம் பி. அண்ணாசாமி ஆசிரியர் முப்பத்தெட்டு வருட ஆசிரிய சேவைக்குப்பின் இவ்வருடத்துடன் ஓய்வு பெறுகின்றார். 1932-ம் ஆண்டு தேவரையாளி இந்துக்கல்லூரியில் கல்வி கற்பிக்க இவர் ஆரம்பித்த பின்னர் கொற்றாவத்தை அ.மி. பாடசாலை, காரைநகர் அ. மி. பாடசாலை, கொழும்பு தொண்டர் வித்தியாலயம் ஆகியவற்றில் நற்பணி புரிந்து இன்று தேவரையாளி இந்துக் கல்லூரியிலிருந்து தமது சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார் திரு. அண்ணாசாமி சமூகசேவை இயக்கங்களில் ஈடுபட்டு உழைத்தது மட்டுமன்றி நாடகங்கள் மூலமும் அரும்பணி ஆற்றியுள்ளார். சிறந்த நாடக நடிகரான இவர் இதுவரை இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்த சாதனைக்குரியவர் தமது எட்டாவது பராயத்தில் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்து இன்றுவரை நாடகப் பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். இவர் தமது நாடகங்களை நிதி உதவிக் காட்சிகளுக்காகவே மேடையேற்றி வரும் பெரும் பேருபகாரி. இவரின் நடிப்புத் திறனைமெச்சி திரு. கே. பி ஹரன் தலைமையில் கரவெட்டியில் எடுக்கப்பெற்ற விழா ஒன்றின் போது கலையரசு சொர்ணலிங்கம் 'கலாவினோதன்' என்னும் விருது வழங்கிக் கௌரவித்தார். நடிப்புக் கலையோடு சித்திரக்கலையும் கைவரப் பெற்ற சிறப்புக்குரிய இவர் நாடகங்களுக்குரிய 'ஸீன்'களைத் தமது கைப்படவே சித்தரிக்கும் கலைஞன். இவரின் சேவையைப் பாராட்டி, தேவரையாளி இந்துக்கல்லூரியின் ஆசிரிய சங்கம், பெற்றோராசிரிய சங்கம் பழைய

### மாணவர் மத்தியில்

# நாட்டுக்குப் பணிபுரியும் மனப்பான்மை வேண்டும்

## உலகத்தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் அளித்தபேட்டி

— மு. வாமதேவன் —

உலகத்தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இராசனார்த்தனத்தை அண்மையில் பலாலி கனிட்ட பல்கலைக்கழகத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதற்குமுன் நான்கு தடவை ஈழத்துக்கு வருகை தந்திருக்கும் இவர் ஈழநாட்டு மக்கள்மீது அபார நம்பிக்கையும் அன்பும் உடையவர். அண்மையில் பாரிஸ் மாநகரத்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடு பற்றியும் அவர் சென்ற 14 நாடுகள் பற்றியும் அளவளாவிய பின்நான் கேட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

எம். ஏ. பட்டதாரியான இவர் நாடகத் துறையில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக 'அண்ணாவின் நாடகங்கள்' பற்றிய ஆராய்ச்சியில் தமிழறிஞர் கலாநிதி மு. வரதராசனின் கீழ் ஈடுபட்டுள்ளதை ஆரம்பத்தில் என்னிடம் கூறிவிட்டு நீங்கள் என்னிடம் என்னதான் கேட்கப் போகிறீர்கள்? என்று கேட்டார்.

இப்பொழுது உலகத்தில் முப்பத்திரண்டு பல்கலைக்கழகங்களில் தமிழ் போதிக்கப்படுகின்றது இன்னும் பதினைந்து பல்கலைக் கழகங்களில் தமிழ்மொழி போதிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன, என்று உணர்ச்சியுடன் கூறிய அவர் இதில் ஈடுபட்டிருக்கும் வண. பிதா தனிநாயகம் அடிகளாரை வெகுவாகப் பாராட்டினார்.

உலகத்தமிழ் இளைஞர் பேரவையின் முக்கிய நோக்கங்கள் என்ன என்று கேட்டவுடன் உலகத்தில் எந்தெந்தப் பகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் வாழ்கிறார்களோ அங்கங்கெல்லாம் வாழும் தமிழ் இளைஞர்களை மொழியினால் இலக்கியத்தினால் பண்பாட்டினால் ஒன்றுபடுத்துவதும் அவர்கள் வாழும் நாட்டின் நலனையும் இலக்கிய வளர்ச்சியையும் பேணுவதும் இப் பேரவையின் முக்கிய நோக்கங்களாகும். இதற்காக மலேசிய

நீங்கள் ஈழநாட்டிற்கு வருகை தந்ததின் முக்கிய நோக்கம் என்ன? அதுபற்றி சற்று விளக்கமாகக் கூறுவீர்களா?

ஈழத்திற்கு வந்ததின் முக்கிய நோக்கம் 1971-ம் ஆண்டு தைமாதமளவில் சென்னையில் நடைபெறவிருக்கும் திரைப்பட விழாவிற்கு ஈழத்தில் தயாராகி வெளியாகிய தமிழ் சிங்கள படங்களை தமிழகத்தில் உள்ள மக்களும் கலைஞர்களும் ஒருங்குசேர்ந்துபார்ப்பதற்குரிய ஒழுங்குகளைமேற்கொள்வதே. இது சம்பந்தமாக இங்குள்ள படத் தயாரிப்பாளர்களுடனும் மற்றும் கலைஞர்களுடனும் கலந்து பேசியுள்ளேன்.

திரைப்பட விழாவின் போது ஈழத்துக்கலைஞர்களை தமிழ் கலைஞர்கள் வரவேற்பார்களா?

ஈழத்துக் கலைஞர்களையும் அவர்களின் கலை வளர்ச்சியையும் பார்த்து அவர்களுடன் நல்லெண்ணத் தொடர்பு கொள்ள தமிழகக் கலைஞர்களும் மக்களும் ஆவலுடன் இருக்கிறார்கள். அவர்களது ஆர்வம் இத்திரைப்பட விழாவின்போது பூர்த்தியாகும் என நம்புகிறேன்.

### குதிரைக்குப் பெயர் 'தமிழ்'

பாரீஸ் மகாநாட்டிற்குச் சென்றிருந்த உங்களுக்குப் பல சுவையான மறக்கமுடியாத சம்பவங்கள் ஏற்பட்டிருக்கும்?.

எனக்குத் தெரியும் இப்படிக் கேட்பீர்கள் என்று. பாரீஸ் மாநகரம் ஒருகாலத்தில் வரையாது வாரி வழங்கும் பாரி மன்னன் இருந்த இடமோ என்னமோ தெரியவில்லை. அங்கு வாழும் மாணவர்கள் பாரீஸை 'பாரி' மாநகரம் என்றழைப்பதையும் மகாநாட்டின் போது யுனெஸ்கோ உதவி செயலாளர், திரு ஆதிசேஷ்யா ஆயிரத்திற்கு அதிகமான தமிழ் மக்கள் கலந்து கொண்ட விருந்து வைபவத்தின் போது தமிழின் தொன்மையையும், பெருமைச்சிறப்பை

திடலைப் பார்க்கச் சென்றபோது அங்கு 'தமிழ்' என்ற பெயர் பொறித்த குதிரை ஒன்று நின்றிருந்தது. அதற்குரியவரிடம் 'தமிழ்' என்று ஏன் பெயர் வைத்தீர்கள்? என்று கேட்டபோது, குதிரைக்குரியவர் 'உலகத்தில் பழமையான மொழி ஒன்று உண்டென்றால் அதுதான் தமிழ். அதற்காக அக் குதிரைக்குத் தமிழ் என்றுபெயர் வைத்தேன். ஆனால் அக் குதிரை இதுவரைக்கும் ஜெயிக்கவில்லை. எனினும் அது எப்போதென்றாலும் ஒருமுறை ஜெயிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்றதும் நான் என் மனத்திற்குள் எப்படியென்றாலும் தமிழ் வெல்லத்தான் போகின்றது என்று அசைபோட்டேன்

இளைஞர் பேரவைத் தலைவராக இருக்கும் நீங்கள் மாணவர்களுக்குக் கூறும் அறிவுரைகள் என்ன?

இன்றைய உலகில் மாணவர்கள் பெரிய பொறுப்பை ஏற்றுப் பெரும் பணிசெய்ய வேண்டியிருக்கிறார்கள். தாங்கள் வாழும் நாட்டின் நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் உழைக்க வேண்டிய பெரும்பணி அவர்கள் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. 'நாடு எனக்கு என்ன செய்தது? என்று கேட்பதைவிட நாட்டுக்கு நான் என்ன செய்துவிட்டேன் என்று கேட்கக் கூடியவர்களாகத் தங்களைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும்

இறுதியாக எனது பேட்டியை முடிக்குமுன் ஈழத்தில் இப்பொழுது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பெரும் பிரச்சினையாகவுள்ள 'தமிழக இலக்கிய சஞ்சிகைகள்' தடைபற்றிக் கேட்டேன். இதற்கு அவர் உடனே 'தடை என்பது எந்த ஒரு நாட்டுக்கும் குறிப்பாக இருக்கக்கூடாது. அது மற்றும் நாடுகளின் இலக்கியங்களுக்கும் இருக்கவேண்டும்' என்று சுருக்கமாகச் சொல்லி வைத்தார்.

— —

## இடமாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்குரிய நேரம் 45 நிமிட மாக அதிகரிக்கப்பட்டுள்ளது


ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்,
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
**காதல் பறவை**



ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த
**மாட்டுக்கார வேலன்**



வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
இன்று மட்டும்
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த
**நேர் வழி**



கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளிலும்
**யாழ். வெலிங்டன்**
திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி
ப. நீலகண்டனின் டைரக்‌ஷனில் உருவாகி



மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ

முத்துராமன்
அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர்
மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்



**கண்ணன் என் காதலன்**
தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


பருத்தித்துறை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கப் பொதுக் கூட்டத்திற் பேசும் போது குறிப்பிட்டார். பருத்தித் துறை நகரசபை உபதலைவர் திரு. கே சேனுதிராசா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு ஜெயசிங்கம் மேலும் கூறியதாவது:

'சோஷலிசம் என்பது சோம்பிக்கிடக்கும் ஒரு நாட்டில் வானத்திலிருந்து விழும் ஒரு பொருளல்ல. அதற்காகப் போராடுவதும் அதைப் பெற்றபின் அதைப் பேணி வளர்ப்பதும் மக்களின் கடமையாகும். மக்கள் அக்கடமையை மறந்த காரணத்தினாலேயே சில நாடுகளில் சர்வாதிகாரம் தலை தூக்கியது'

கட்டைவேலிக் கிராம சபைத் தலைவர் திரு. எஸ். மாணிக்கம், திரு. எஸ். கே. சிதம்பரநாதன் ஆகியோரும் பேசினர்.


இன்று மட்டும்
**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி—பத்மினி
நடித்த
**தில்லானா மோகனாம்பாள்**



**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 4-45, 6-30, 10-00
BULLITT
(Color)



MANOHARA
Jaffna
Daily 4-45, 7 &9-45 p.m.
Poya days 4 shows
Michael Caine
Noel Coward
in
"THE ITALIAN JOB"
(Panavision-color)



REGAL
Jaffna
Daily 4-45,7&9-45p m.
Poya days 4 shows
Janette Scott
in
BIKINI PARADISE
(adults only)


சபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

0 0 0

நெடுங்கேணி, செவ்வாய்

நெடுங்கேணி நாவலர் நாடக மன்றத்தின் கூட்டம் நெடுங்கேணி கி. மு ச மண்டபத்தில் நடைபெற்ற பொழுது பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

காப்பாளர்கள்: திருவாளர்கள் சே மா செல்லத்தம்பு பா. உ. வவனியா, ஆ பெருமையினர், ஜெ செந்தில்நாதன் (பிரிவுக் காரியாதிகாரி), சி உ வல்லிபுரம் (கி ச தலைவர்), வே கணபதிப்பிள்ளை (கி மு ச தலைவர்), தலைவர்: திரு நா காராளசிங்கம், உபதலைவர்: திரு கு சிவலிங்கம், செயலாளர்: திரு த ம பீற்றர் பொன்கலன்ட், உப செயலாளர்: திரு பொ பத்மநாதன், தனாதிகாரி: திரு க நவரத்தினம், உப தனாதிகாரி: திரு இ லோகநாதன். ஏழு பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

எழுதுமட்டுவாள், செவ்

எழுதுமட்டுவாள் நடேசர் தமிழ் மன்றத்தின் பொதுக் கூட்டம் சமீபத்தில் திரு ச பொன்னம்பலம தலைமையில் நடைபெற்றபோது புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு நா சுப்பிரமணியர், உபதலைவர்: திரு எஸ் பரமலிங்கம், காரியதரிசி: திரு கா குமாரசாமி, உபகாரியதரிசி: திரு த இராசதுரை, தனாதிகாரி: திரு சி வீரசுத்தி. இத்துடன் 8 பேர் அடங்கிய நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

மாவிட்டபுரம், செவ்

கல்வியன்காடு கம்யூனிஸ்ட் வாலிபர்சங்க வருடாந்தக் கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆர் செல்வரத்தினம், உபதலைவர்: அ. ஜீவரெத்தினம், காரியதரிசி: சோ. பாலசுப்பிரமணியம் உபகாரியதரிசி: க. இராமநாதன், தனாதிகாரி: வி சுவாமிநாதன், உபதனாதிகாரி ந. விஜயவேல் குமாரன் நிர்வாகசபை உறுப்பினர்களாக சே சதாசிவம் க. விவேகானந்தன், ந. குணபாலசிங்கம், சோ. சுப்பிரமணியம் சு. கணேசானந்தாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சேவையைப் பாராட்டி, தேவரையாளி இந்துக்கல்லூரியின் ஆசிரிய சங்கம், பெற்றோராசிரிய சங்கம் பழைய மாணவர் சங்கம் ஆகியவை ஒன்று சேர்ந்து இம்மாதம் 9-ம் திகதி சேவை நலம் பாராட்டு விழாவை நடத்தவுள்ளன.

—''தெணியான்''

# இன்றைய பலன்

கார்த்திகை மீ 24-ந் திகதி
(9-12-70)

மேஷம்- குடும்பத்தில் சுகக்குறைவுகள் தென்படலாம். அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும்.

ரிஷபம்- இதயப்படுதாவில் இன்பக்கூத்து. வாழ்க்கையில் சில காரியங்கள் நிறைந்து இருக்கும்.

மிதுனம்- மனையில் பூசல்கள் தோன்றிமறையும். தனிமையை விரும்புவீர்கள் பொறுமை விரும்பத்தக்கது.

கடகம்- திடீர்வரவுகளுக்கும் இடமுண்டு. வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். பொன்னான தினம்.

சிம்மம்- அதிர்ஷ்டகரமான தினம். சிலர்வாழ்க்கையில் திரவிய இலாபத்திற்கும் இடமுண்டு. அமைதி வேண்டும்.

கன்னி- வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம். உடல்நலத்தைப் பேணவும்.

துலாம்- மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும் சம்பவங்கள் இடம்பெறும். குடும்ப வாழ்க்கையில் தென்றல் வீசும்.

விருட்சிகம்- செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும். சதிசெய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக்கொண்டிருப்பர்.

தனுசு- பொதுப்பணி மூலம் புகழுக்கு இடமுண்டு. அரசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்டம் அடிக்கலாம்.

மகரம்- தொழில்துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். சுபதினம்

கும்பம்- வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும். சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு தென்படும்.

மீனம்- சிறிய காரியத்தை முடிப்பதற்கும் அதிக பணத்தை செலவுசெய்வீர்கள். அவதானம்வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

பேணுவதும் இப் பேரவையின் முக்கிய நோக்கங்களாகும். இதற்காக மலேஷிய நாட்டிலும் சிங்கப்பூர் நாட்டிலும், ஏன் அண்மையில் [illegible]ரீஸ் மாநாட்டின்போதும் அங்குள்ள தமிழ் இளைஞர்களினால் கிளைகள் நிறுவப்பட்டுள்ளன. ஈழத்திலும் இதன் கிளை உண்டு என்று விளக்கினார்.

விருந்து வைபவத்தின் போது தமிழின் தொன்மையையும், பெருமைச்சிறப்பையும் ஆங்கிலத்தில் மணிமணியாக எடுத்தியம்பியதையும் என்னால் மறக்கவே முடியாது இந்த விருந்து வைபவத்தையும் திரு ஆதிசேஷ்யா அவர்களே ஒழுங்கு செய்திருந்தார். பாரிஸில் உள்ள குதிரைப் பந்தயத்

## இடமாற்றம்

ஊரதீவு, செவ்வாய்

புங்குடுதீவுக் கிராமசபையின் பிரதம லிகிதர் திரு. ந. தம்பிராசா ஓய்வுபெறுகிறார். இவரது இடத்திற்கு யாழ்ப்பாண மாநகரசபையைச் சேர்ந்த திரு. கே. தங்கராசா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


விற்பனையாகின்றது

**'ஈழநாடு' தினக்குறிப்பு**
**1971**

முற்றிலும் புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டு
விசேஷமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

60 பக்கங்கள் கொண்ட தகவல்கள்

★ அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறைகள்
★ போயா விடுமுறைகள்
★ பாடசாலை தவணை விடுமுறைகள்
★ உலக - இலங்கை புவியியல், குடியியல், சரித்திரம் சம்பந்தமான குறிப்புகள்
★ தபால் தந்தி விகிதங்கள்
★ பஸ், புகையிரத, விமான சேவை நேர அட்டவணை
★ கிரகங்களின் அட்டவணை

[ இன்னும் பல குறிப்புகள் ]

விலை: ஒன்று 1 ரூ. 50 சதம்
வியாபாரிகளுக்கு கழிவுண்டு,

'ஈழநாடு' (வர்த்தக அச்சகப் பகுதி)
த. பெ. எண். 49 — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான் தேர்தல்

# கிழக்குப் பாகிஸ்தானில் அவாமிலீக் முன்னணி வகிக்கின்றது

# மேற்கில் பூட்டோவுக்கு அமோக வெற்றி

### எயர் மார்ஷல் அஸ்கர்கான் தோல்வி

கராச்சி, டிசம்பர் 8

பாகிஸ்தானில் முதல் முதலாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் கிழக்குப் பாகிஸ்தானில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் தலைமையிலான அவாமி லீக்கட்சியும், மேற்குப் பாகிஸ்தானில் முன்னாள் வெளிநாட்டமைச்சர் சுல்பிகார் அலி பூட்டோவின் தலைமையிலான இடதுசாரி மக்கள் கட்சியும் முன்னணியில் நிற்கின்றன. முன்னாள் மந்திரிகள் இருவர் தோல்வியடைந்துள்ளனர். எயர் மார்ஷல் அஷ்கர்கானும் தோல்வியடைந்தார், தேர்தல் அசம்பாவிதங்களில் இருவர் பலியாகியுள்ளனர்.

கடந்த பன்னிரண்டு வருட ராணுவ ஆட்சியின் பின் திங்கட்கிழமை நடந்த பாகிஸ்தான் முதலாவது பொதுத்தேர்தலில் 60 சத வீத மக்கள் தங்கள் வாக்குகளை அளித்தனர். அண்மையில் சூறுவளியினால் கிழக்குப் பாகிஸ்தான் அழிவுக்குள்ளானாலும் மக்கள் தேர்தலில் சுறுசுறுப்புடன் வாக்களித்தனர். பாகிஸ்தான் வாக்காளரில் 80 சத வீதமானவர்கள் பாமரர்களாகையால் அவர்கள் தாங்கள் விரும்பிய வேட்பாளருக்கு வாக்களிக்கக்கூடிய வகையில் வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

ராணுவமும் பொலிசும் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனித்துவந்தன. பாதுகாப்புப்படையினர் ஹெலிகொப்டர் மூலம் நிலைமையை அவதானித்துவந்தனர்.

இன்று அதிகாலையில் கிடைத்த செய்திகளின்படி கிழக்குப்பாகிஸ்தானிலுள்ள மொத்தம் 162 தொகுதிகளில் 29 தொகுதிகளில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் […]

[…] தெடுக்கப்பட்டுள்ளார் இவர் 'பிரிவினைத்தந்தை' என்று அழைக்கப்படுபவர். மேற்குப் பாகிஸ்தானியர் கிழக்குப் பாகிஸ்தானை எல்லாவகையிலும் புறக்கணிப்பதாகவும் அதனால் அதற்கென ஒரு தனி அரசு வேண்டுமென இவர் பல போராட்டங்களை நடத்தியவர் இதனால் அயூப்கான் காலத்தில் இவர் கொடும் சிறை அனுபவங்களைப்பெற்றார். இதனால் கிழக்குப் பாகிஸ்தானில் பல படுகொலைகள் பயங்கர நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பின்னர் விடுதலை செய்யப்பட்டார். அண்மையில் கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற சூறுவளி நிவாரண வேலைகளில் யாகியாகான் ஆட்சி தாமதம் காட்டிவருவதாகவும் இவர் குற்றம் சாட்டியிருந்தார் பெரும்பாலும் தேர்தல் முடிவுகள் அவாமி லீக்கிற்கே சாதகமாக இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்

மேற்குப் பாகிஸ்தானில் அயூப்கான் அரசில் வெளி […]

[…] பப்படுகிறது. பூட்டோ பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார். இன்னோர் தொகுதியிலும் இவர் பெரும்பான்மை வாக்குகளைப்பெற்றுவருவதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவித்தன. பூட்டோவின் இடதுசாரி மக்கள் கட்சி 119 தொகுதிகளில் போட்டியிடுகின்றது. அலிகான் பூட்டோ அயூப்கான் அரசின் வெளிநாட்டமைச்சராவர். இவர் சீனச் சார்புடையவர். இவர் கருத்து வேற்றுமை காரணமாகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர் சிறையில் சில காலம் வைக்கப்பட்டார். பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

இத் தேர்தலில் முன்னாள் அமைச்சர்கள் இருவர் தோல்வியடைந்துள்ளனர். பாகிஸ்தான் முன்னாள் விமானப்படைத் தலைவர் எயர் மாஷல் அஸ்வர்கான் தோல்வி அடைந்துள்ளார். பழங்குடிமக்களுக்காக ஒதுக்கப்பட்ட 7 தொகுதிகளில் பெரும்பாலும் சுயேச்சைகளே வெற்றி பெற்றுள்ள […]

வாயுமெத்தை ரயில்

## பிரிட்டனில் திட்டம் பரிசீலனை

லண்டன், டிச. 8

மணிக்கு 250 மைல்கள் வேகத்தில் ஓடும் புரட்சிகரமான ரயில்களை உருவாக்கும் செயல் திட்டம் பற்றி பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் இப்பொழுது பரிசீலனை செய்து வருகிறார்கள். போக்குவரத்துத் துறையில் ஒரு புதிய சகாப்தத்தை உண்டு பண்ணவிருக்கும் இந்த அதிசய வாகனத்தின் தொழில் நுணுக்கப் பிரச்னைகள் செலவினங்கள் பற்றி ஆராயப்படுகிறது.

லண்டனிலுள்ள ஹீத்ரோ விமான நிலையத்தையும் ஹாட்விக் விமான நிலையத்தையும் இணைக்கவிருக்கும் பாதையில் இந்த ரயில் ஓடும். கான்கிரீட் பாதை மீதாக வாயுமெத்தையில் மிதந்து செல்லும் இந்த நவீன ரயில் மின் உந்துவிசைப் பொறிகளால் இயக்கப்படும்

உத்தேச வாயுமெத்தை ரயில் 80 அடி நீளமானதாக 100 ஆசனங்களைக் கொண்டதாக அமைக்கப்படும். பாதுகாப்பாக அதிவேகமான பிரயாணங்களை மேற்கொள்வதற்கு இதுஒரு சிறந்த வாகனமாகக் கொள்ளப்படுகிறது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆதரவுடன் பிரிட்டிஷ் தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் இந்த ரயில்களை அமைக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகிறது. இக்கூட்டுத்தாபனம் கிழக்கு இங்கிலாந்தில் பரிசோதனைப் பாதைகளை அமைத்து வருகிறது இப் பாதைகளில் மாதிரி ரயில்கள் ஓடவிட்டுப் பரிசோதிக்கப்படும்.

## பி.பி.ஸியில் பயிற்சி பெறுவர்

கோட்டை, செவ்வாய்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் […]

ஒரே கட்டிடத்தில்

# 48 வகைத் தட்ப வெப்பநிலைகள்!

நியூயோர்க், டிச, 8

முதல்அறையில் பாலைவனத்திலுள்ளது போன்ற கடும் வெப்பம்; வரட்சி. ஆனால் அடுத்த அறையில் துருவப் பகுதியிலுள்ளது போன்ற கடும்குளிர் காற்று வீசுகிறது. 'பயாட்ரான், என்னும் கட்டடத்தில்இது அன்றாட நிகழ்ச்சி. அமெரிக்காவிலுள்ள இந்த ஆய்வுக் கூடத்தின் அறைகளில் விஞ்ஞானிகள் செயற்கை முறையில் பலவேறு பருவ நிலைகளையும் படைத்து வருகிறார்கள். இந்த ஆண்டுசெப்டம்பர் முதல் இந்த ஆய்வுகூடம் பணி புரிந்துவருகிறது.

'பயாட்ரான்' ஆய்வுக் கூடத்தில் 48 அறைகள் உண்டு. அவை ஒவ்வொன்றிலும் செயற்கைமுறையில் பருவ நிலைகளை உருவாக்கிக் கட்டுப்படுத்தி நடத்துகிறார்கள் வெப்பம், காற்றில்ஈரம் காற்றமுத்தம்' காற்றுவேகம் ஒளி ஆகியவற்றை ஒவ்வொரு அறையிலும் வேண்டியவாறு மாற்றமுடியும். உலகில் எந்த ஒரு இடத்திலுமுள்ளதுபோன்ற பருவ நிலையைச் செயற்கையாக இந்த அறைகளில் உருவாக்க முடியும்.

அலுமாரி போன்ற சிறு அறைமுதல் 9அடி அகலமும் 31 அடி நீளமும் உள்ள பெரிய அறைவரையில் பலவேறு அளவுகளில் இந்தஆய்வுக்கூடத்தில் அறைகள் உண்டு. பருவ நிலைகளைக் கம்ப்யூட்டர் பொறிகள் ஒழுங்குபடுத்துகின்றன; ஆராய்ச்சி முடிவுகளைப்பதிவு செய்து, ஆராய்வதிலும் விஞ்ஞானிகளுக்கு அவை துணை செய்கின்றன. விஞ்ஞானிகள் விரும்பினால் எந்த அறையிலும் ஒரே பருவ நிலையை நெடுங்காலத்துக்கு நீடிக்க முடியும் அல்லது இந்தப் பொறிகள்பத்து நிமிடத்துக்கு ஒரு தடவை அன்றாட அல்லது அந்தந்தக் காலபருவநிலைகளைச் செயற்கை முறையில் தாமே உருவாக்கும்.

### ஒளியும் வெப்பமும்

இன்னொரு புதுமையான அறை இருக்கிறது. அந்த அறையின் அகல வாட்டில் பல அளவுகளில் ஒளிச் செறிவு மாறிக்கொண்டேயிருக்கிறது; நீள வாட்டில் வெப்பம் மாறிக்கொண்டேயிருக்கிறது. கோழிவளர்ப்பு வல்லுநர் மில்டன் ஸண்டே, இந்த அறையில் கோழிக் குஞ்சுகளை விடுத்து. ஒன்பது வகையான ஒலி- வெப்பச் சேர்க்கையில் அவை இயற்கையாக விரும்பும் நிலவரம் எது என்று கண்டறிந்தார். அவை அவ்வகை ஒலி-வெப்பச் சூழ்நிலையில் விரைந்து வளரக் கண்டார். வல்லுநர்கள் கூறிவந்ததைவிட அவை கூடுதல் வெப்பத்தை விரும்புகின்றன.

'ஃப்ளூ' தொத்து நோயாகப் பரவுவதற்கான காரணங்கள்: 'ஸாஸ்' என்னும் உணவுப் பண்டம் கெடாமல் காக்கும் முறைகள்; மகரந்தத்தூள் வளர்ச்சியில் பருவநிலை ஏற்படுத்தும் விளைவுகள்; பயிர்நோய்த் தடுப்பு வழிகள். அகதல்-புளித்தல் ஆகியவற்றில் வெப்பம், மழை இவற்றின் பங்கு. குப்பைகூளங்களை ஒழிக்கத் திருந்திய முறைகள்முதலியவற்றைக் கண்டறியப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் 'பயாட்ரான்' ஆய்வுக் கூடத்தைப்பயன்படுத்தியுள்ளனர்.

பிரிட்டனிலிருந்து

## சோவியத்அதிகாரிகள் மூவர் வெளியேற்றப்பட்டனர்?

லண்டன், டிச, 8

பிரிட்டனில் உளவுவேலை […]பட்டார்கள்என்று குற்றஞ் சாட்டப்பட்டு சோவியத்யூனியன் தூத […]

[…]ரகங்களும்உளவுவேலைகளில் ஈடுபட்டிருப்பதாக பிரிட்டிஷ் வெளிவிவகாரஅமைச்சு சம்பந்தப்பட்டநாடுகளிடம் எச்சரிக்கை செய்துள்ளது. […]

# லண்டன் மாநகரில் நாவலர் விழா

லண்டன், டிச 8

லண்டன் தமிழ் கழகத்தாரின் ஆதரவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 91 வது குருபூசை விழா வை எம். சீ ஏ. மகாத்மா காந்தி ஞாபகார்த்த மண்டபத்தில் நவம்பர் 29 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரிட்டனில் முதல் முறையாக நடைபெற்றது.

திரு. வை. முத்துக்குமாரசுவாமி (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்) நர்வலர் பெருமானைப்பற்றி முக்கிய சொற்பொழிவு ஆற்றினர். தலைவர் திரு. ஐ குமாரவேலு வரவேற்புரை நிகழ்த்தினர். முன்னைநாள் இலங்கை வானெலி கலைஞர் திருமதி பாக்கியம் ஞானப்பிரகாசம் நாவலர் புகழ் பாடியதுடன் நாவலர் பாட்டுக்கள் சிலவற்றையும் சிறப்பாகப் பாடினர் திருமதிகள்: ஜெயலட்சுமிகந்தையா யோகா இராசநாயகம் ஆகியோர் இன்னிசை வீணை விருந்து அளித்தார்.

"நாவலர் நாடகக்காட்சிகள் நடிக்கப்பட்டன. இதில் கே சிவகுருநாத பிள்ளை, திரு மோகன், திருமதி உமா மூர்த்தி முதலியோர் பங்குபற்றினர் திரு வை முத்துக்குமாரசுவாமியால் வசனம் எழுதப்பட்டது.

செல்வி பிரேமா விக்டரின் நடனம்இடம்பெற்றதுசெயலாளர் என். கந்தசுவாமி நன்றி கூறினர். நாவலர் எழுதிய நூல்களும் நாவலரைப் பற்றி எழுதப்பட்ட நூல்களும் பொதுமக்களுக்கு பார்வைக்கு வைக்கப்பட்டன.

## பிரேசிலில் சுவிஸ் தூதர் கடத்தப்பட்டார்

### கார் சாரதியொருவர் கைது

பிரேசிலியா (பிரேசில்), டிசம்பர் 8

பிரேசில் நாட்டிலுள்ள சுவிற்சர்லாந்து தூதுவர் திரு ஜமாலிபூஷ்வர் கடத்தப்பட்டார். இவர் வீட்டிலிருந்து தூதரகத்திற்கு காரில் சென்றுகொண்டிருக்கையில் இவர் இரு வாகனங்கள் மூலம் இடைமறிக்கப்பட்டு கடத்தப்பட்டதாக செய்திகள் கிடைத்துள்ளன. தூதுவரைக்கடத்தும் பொழுது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் தூதுவரின் பாதுகாவலர் காயமடைந்தார். இவரை கொரில்லாக்கள் கடத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. தூதுவர் கடத்தப்பட்ட இடத்தில் கொரில்லாக்களின் துண்டுப் பிரசுரங்கள் கிடக்கக் காணப்பட்டனவாம். தூதுவரை மீட்பதற்குரிய சகல நடவடிக்கைகளையும் பிரேசில் அரசாங்கம் எடுத்து வருவதாகத் தெரிகிறது.

இக் கடத்தல் சம்பந்தமாக கார்ச்சாரதி ஒருவரைப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர். கடத்தல் சம்பவத்தை நேரில் கண்டதாகக் […]பட 8 பேரை பொலிசார் விசாரித்து வருகின்றனர்.

## கலை, உடற்பயிற்சி வகுப்புக்கள்

சங்கானை, செவ்வாய்

சித்தன்கேணி அண்ணா கலாமன்றத்தாரின் வருடாந்தக்கூட்டம் திரு. க. யோகராசா தலைமையில் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. சங்கீதம், நடனம், (கண்டிய நடனம் உட்பட) பண்ணிசை, மிருதங்கம், வயலின், நாடகம், சித்திரம், கைப்பணி, சிற்பம், காவடி ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆகியகலை நிகழ்ச்சிகளும் யோகாசனம், மல்யுத்தம், சிலம்படி ஆகிய உடற் பயிற்சிகளை இலவசமாக அளிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இம்மாதமே இதற்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்: காப்பாளர்கள்: செல்வன் செ. சிவனடியான், […]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் 29 தொகுதிகளில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் தலைமையிலான அவாமி லீக் கட்சி வெற்றிபெற்றுள்ளது இக்கட்சி எல்லாத் தொகுதிகளிலும் வேட்பாளரை நிறுத்தியுள்ளது. மற்றத் தொகுதிகளிலும் இக்கட்சியே முன்னணியில் நிற்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன இக்கட்சியின் தலைவர் ரஹ்மான் அமோக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது மட்டுமல்ல டாக்காவில் இரு தொகுதிகளில் இவர் தேர்ந்

மேற்குப் பாகிஸ்தானில் அயூப்கான் அரசில் வெளிநாட்டமைச்சராகவிருந்த சுல்பிகார் அலி பூட்டோவின் தலைமையிலான இடதுசாரி மக்கள் கட்சி பெரும் வெற்றியை அடைந்துவருகிறது. மேற்குப் பாகிஸ்தானிலுள்ள 38 தொகுதிகளில் இதுவரை 28 தொகுதியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் 16 தொகுதிகளில் இடதுசாரி மக்கள் கட்சி வெற்றிபெற்றுள்ளது. பஞ்சாப் சிந்து ஆகிய இடங்களில் இக்கட்சிக்கு பெரு வெற்றி கிடைக்குமென நம்

பெரும்பாலும் சுயேச்சைகளே வெற்றி பெற்றுள்ளனர் என செய்திகள் தெரிவித்தன.

இத்தேர்தலையொட்டி ஓர் இடத்தில் இரு கட்சி ஆதரவாளர்களிடையே நடைபெற்ற கைகலப்பில் இருவர் பலியானார்கள். 14 பேர் காயமடைந்தனர். கராச்சி, ராவல்பிண்டி. மற்றுமுள்ள சில நகரங்களில் சிறுசிறு அசம்பாவிதங்கள் நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

— —

# சாக்கடை நீரை குடி நீராக்கலாம்

நியுயோர்க் டிச. 8

கழிவு நீரையும் சாக்கடை நீரையும்சுத்த நீராகமாற்றி விடும் இயந்திரம் ஒன்று அமெரிக்காவிலே மூன்று ஆண்டுகளாகச் சோதனை அடிப்படையிலே செயல்பட்டு வருகிறது.

செலவு குறைவாகவும் திறமை அதிகமாகவும் இது பணியாற்றுகிறதாகக் கண்டு கொள்ளப்பட்டுள்ளது. கழிவு நீரைச் சுத்தமாக்க இப்பொழுதுகையாளப்பட்டு வரும் பிற முறைகளைவிட செம்மையான திறமையான முறை இந்த ஆலையில் பயன்படுகிறது.

நியூயோர்க் நகரின் ஒரு பகுதியானலாங் தீவிலே ஜமைக்கா என்ற இடத்தில் இருக்கும் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையில் இந்த இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலையில் அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளிலிருந்து சாக்கடை நீர் சுழலும்வட்டுக்கள் வழியாகப் பாய்கின்றது. அடுக்கடுக்காகக் கோத்து வைக்கப்பட்டிருக்கும் இந்த வட்டுக்கள் மின் விசையால் இயங்குகின்றன ஒவ்வொரு வட்டிலிலும் பல்வேறு வகையான நுண் உயிர்கள் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றன இவை தண்ணீரில் இருக்கும் அசுத்தங்களை எல்லாம் தின்று விடுகின்றன சுத்திகரிப்புப் பணி முடிவிலே இந்த நுண்ணுயிர்கள் அனைத்தும் தண்ணீரிலுள்ள அசுத்தங்கள் அனைத்தையும் தின்றுவிட்டிருக்கும் பின்னர் இந்தத் தண்ணீர் கார்பன் ஃபில்ட்டர் (வடிகட்டும் அமைப்பு) வழியாகப் பாய்ந்து செல்லும் போது எஞ்சியுள்ள அழுக்கும் அசுத்தங்களும் நீக்கப்பட்டுவிடுகின்றன.

இந்தத் திட்டத்துக்கு அமெரிக்க மத்திய அரசு ஓரளவு ஆதரவுதந்துள்ளது. மானியங்களாக அது ஏழரை லட்சம் டாலர்வழங்கியிருக்கிறது. அமெரிக்க அரசு உள்துறையின் தண்ணீர் பிரிவு வழியாக வழங்கப்பட்டுள்ள மானியங்கள் இவை புதிய நியூ ஜெர்ஸி மாநிலத்திலே இருக்கும் நியூ பிரின்ஸ்விக் நகரில் இருக்கும் ராட்ஜர்ஸ் பல்கலைக்கழகத்திலே உருவாக்கப்பட்டது இந்தப் புதிய சுத்திகரிப்பு முறை.

இந்தசுத்திகரிப்புமுறைக்கு இருக்கும் ஒரு நன்மை கடைசி வட்டுகளில் வளரும் பாசிகளை எடுத்துக் கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதாகும் இந்த சாத்தியக்கூறும் இப்பொழுது ஆராயப்படுகிறது. இன்னொரு நன்மை அதிக வட்டுக்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் தண்ணீரின் தூய்மையை அதிகரிக்க முடியும்.

பெரும்பாலான சுத்திகரிப்பு முறைகளில் கழிவுகள் எல்லாம் கனப்பொருள்களாக அடியில் படிந்துவிடும் புதிய முறை ஆற்றில் சாக்கடைநீர்கலந்துபின்னர் அது தூய்மையடைவது போலாகும் ஆனல் இந்த முறையை உருவாக்கிய வல்லுநர்கள் கூறுவதென்ன? ஆற்றில் ஒரு மாதம் நடக்கும் தூய்மைப்படுத்தும் பணி இந்தப்புதிய முறையில் ஒரே மணிநேரத்தில் நடந்து விடுகிறது என்பதாகும்

பிரிட்டனில்

## பிரதமரின் புதல்வர்

லண்டன், டிச. 8

இலங்கைப் பிரதமரின் புத்திரரான திரு. அனுரா பண்டாரநாயக்காவும் இலங்கை எம். பி. ஒருவரான திரு. பி. எம் ராஜபக்ஸவும் பிரிட்டனில் சுற்றுப்பயணம் செய்தனர் லண்டன் மாநகரத்தையும் பிரிட்டனின் மத்திய மாகாணத்தையும் இவர்கள் சுற்றிப் பார்வையிட்டனர்:

பெலியத்த தொகுதி எம் பியான திரு. ராஜபக்ஸா இதுவே முதல் தடவையாக பிரிட்டனுக்கு விஜயம் செய்திருக்கிருர். பிரிட்டனில் தமது விஜயத்தை முடித்துக்கொண்டு அவர் கிழக்கு ஜெர்மனிக்குப் பயணமாவார். திரு. அனுரா லண்டன் சர்வகலாசாலையில் சரித்திர மணவராகப் படிக்கவிருக்கிருர். அவாது படிப்பு முடிய மூன்று ஆண்டுகள் பிடிக்கும் 'எமது சுற்றுப் பிரயாணம் மிகப் பயனுள்ளதாக அமைந்தது' என்று அவர் லண்டனில் பத்திரிகையாளரிடம் கூறினுர்.

சிறிம்சே என்னுமிடத்தில் உள்ள மீன்பிடித் தளங்கள் அவர்களை வெகுவாகக் கவர்ந்தது. உணவைத் தகரடப்பாக்களுக்குள் அடைக்கும் தொழிற்சாலை ஒன்றிற்கும் அவர்கள் விஜயம் செய்தனர் மத்திய மாகாணத்திற்கு அவர்கள் விஜயம் செய்தபோது ஸ்டோன்லீக் பட்டினத்திலுள்ள இளம் விவசாயிகள் தேசிய சம்மேளனத்தின் தலைமைக் காரியாலயத்தையும் நேரில் பார்வையிட்டனர். பிரிட்டனின் இரண்டாவது பெரிய நகரமான பர்மிங்ஹாமிற்கும் அவர்கள் விஜயம் செய்தனர். ஆக்ஸ்போர்ட் நகரைச் சுற்றிப் பார்வையிட்டதன் பின்னர் லண்டனிலுள்ள கன்சர்வேடிவ் கட்சியின் மத்திய காரியாலயத்திற்கும் தொழிற் கட்சியின் தலைமைக் காரியாலயத்திற்கும் விஜயம் செய்தனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 'வானொலி மூலம் ஆங்கிலம்' கற்பிக்கும் நிகழ்ச்சிகளைத் தயாரித்தளிக்கும் செல்வி டபிள்யு. மல்லிகா சேனரத் லண்டன், பி பி ஸியில், பயிற்சி பெறவெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பாடசாலை ஒலிபரப்பாளருக்கென பி பி ஸி வருடாந்தம்.மூன்று மாதப்பயிற்சியை ஒழுங்குசெய்து வருவது குறிப்பிடத்தக்கது

ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகப் போதிக்கும் நிகழ்ச்சிகள், விஞ்ஞான நிகழ்ச்சிகள். இலங்கைப் பாடசாலைகளில் தற்போது அறிமுகம்செய்து வைக்கப்படும் புதிய எண்கணித முறைகள் பற்றிய நிகழ்ச்சிகள் போன்றவற்றைத் திட்டமிட்டுத் தயாரிக்கும் நுணுக்கமான முறைகளைப் பற்றி செல்வி சேனரத் பி பி ஸியில் படித்தறிவார்.

கொழும்புத்திட்ட, நுண்தொழில் உதவித் திட்டத்தின் கீழ் பிரிட்டன் செல்லும் செல்வி சேனரத், பல வருடங்களாக வானொலிக்கு நிகழ்ச்சிகள் எழுதித் தயாரிக்கும் பணியில் ஆர்வம் காட்டி வந்துள்ளார் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின்,பொதுத் தராதரப் பரீட்சைக்கான ஆங்கில நிகழ்ச்சி இலங்கைப் பாடசாலைப் பிள்ளைகளின் அமோக ஆதரவுடன் நடாத்தப்படும் ஒரு நிகழ்ச்சியாகும். இதனைப் பொறுப்பேற்று நடத்துபவர் செல்வி மல்லிகா சேனரத்.

— —

## தலதா மாளிகையில் சப்பாத்துத் திருட்டு

கண்டி, செவ்வாய்

தலதாமாளிகையில் பூசை பார்க்கச் செல்வோர், தங்கள் காலணிகளை இழந்துவிட்டு வருவதாகப் பொலிஸாருக்குப் புகார்செய்துள்ளனர் முடிக்குரிய வழக்கறிஞரான திரு. எஸ். எல் குணசேகராவும் வழிபாட்டுக்குச் சென்ற இடத்தில் தமது சப்பாத்துகளை இழந்துள்ளதாகப் புகார் தெரிவித்துள்ளார்.

தலதாமாளிகைக்கு வெளியிலும், உள்ளுக்கும் பொலிஸார் காவல்புரிந்துகொண்டிருக்கையிலேயே இந்தச் சப்பாத்துத் திருட்டுகள் நடைபெறுகின்றனவாம்.

குற்றஞ் சாட்டப்பட்டு சோவியத்யூனியன் தூதரகத்தைச் சேர்ந்த மூன்று வர்த்தக அதிகாரிகளை பிரிட்டன் வெளியேற்றியுள்ளதாக, டெயிலிமெயில்' பத்திரிகை தெரிவித்துள்ளது. வேறு இரு கம்யூனிஸ்ட் நாடுகளின் தூத

## ஜோன்ஸன் மீண்டும் போட்டி

பால்டிமூர், மேரிலாண்ட், டிச 8

1972 ம் ஆண்டு நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனதிபதி தேர்தலில் முன்ஞள் ஜனதிபதிலின்டன் பி, ஜோன்ஸன் மீண்டும்போட்டியிட முன்வரக்கூடும்என்று கூறப்படுகிறது.

திரு லிண்டன் ஜோன்ஸனின் சகோதரர் திரு. சாம் ஹவுஸ்டன் ஜோன்ஸன் இத்தகவலை வெளியிட்டிருக்கிருர். பால்டிமூரில் வைத்து பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றின்போது தமது சகோதரர்லிண்டன் ஜோன்ஸன் 1972 ம் ஆண்டில் மிகவும் சுதந்திரமாக இருப்பார் என்றும் திரு நிக்ஸன் பிழைகள் விட்டால் அல்லது நகருக்குள் அதிகப் பிரச்னைகளுக் குள்ளாகினல் மீண்டும் தேர்தலில் போட்டியிட முன்வருவார் என்றும் ஹவுஸ்டன் ஜோன்ஸன் கூறினர்,

ஜோன்ஸனின் வெளிநாட்டுக்கொள்கையை நிக்சன் அதிகமாக ஒன்றும் மாற்றிவிடவில்லை. உள்நாட்டுக் கொள்கையையும் அவர் அதிகம் மாற்றிவிடவில்லை என்றார் திரு.ஹவுஸ்டன்'

லிண்டன் இப்பொழுதெல்லாம் பெரிய புள்ளிகளான பணக்காரர்களுடன் அதிக தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிருர். ஒருவேளை அவர் உலகத்திலேயே பெரிய பணக்காரராக முயற்சி எடுப்பதாய் இருக்கலாம் ஆனல் 1972 தேர்தலில் அவர் மீண்டும் போட்டியிட வந்தால் நான் ஆச்சரியப்படமாட்டேன் என்ருர் அவரது சகோதரர்'

திரு ஜோன்ஸன் பதவியிலிருந்து விலகியவுடன் திரு. சாம் ஹவுஸ்டன் ஜோன்ஸன் தமது சகோதரரின் வாழ்க்கை பற்றிய சிறப்பானதோர் வாழ்க்கை வரலாற்று நூலை வெளியிட்டார். அது பெருவாரியாக விற்றது. இந்தப் புத்தகம் வெளியான பிறகு இரு சகோதரர்களும் ஒருவரோடு ஒருவர் கதைத்துக்கொண்டதே இல்லையாம்.

சம்பந்தப்பட்ட நாடுகளிடம் எச்சரிக்கை செய்துள்ளது. இவ் வெளியேற்ற உத்தரவுக்கு சோவியத் தூதுவர் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

லண்டனிலுள்ள சோவியத் தூதரகத்தில் வர்த்தக அதிகாரிகளின் எண்ணிக்கை கூட்டப்படுவதனல் பிரிட்டிஷ் துப்பறியும் பகுதியினர் மிகுந்த கவலை அடைந்திருப்பதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

— —

## விமான விபத்தில் 18பேர் பலி

ரெல்அவிவ், டிச. 8

ரெல் அவிவிலிருந்து பிரயாணிகளுடன் புறப்பட்டுச் சென்ற ருமேனிய விமானமொன்று விழுந்து நொருங்கியது. இதில்சென்ற பிரயாணிகளில் 18பேர் பலியானர்கள். மற்றும் சிலர் படுகாயமடைந்தனர். விமானம் முற்முக அழிந்து விட்டது.

காலநிலை சீர்கேடு காரணமாகவே இவ் விபத்து நடைபெற்றதாக ருமேனியா தெரிவித்தது.

— —

## கல்வி அமைச்சருக்கு தீவுப்பகுதி ஆசிரியர்கள் மகஜர்

ஊரதீவு, செவ்வாய்

'தங்கள் அமைச்சினல் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் கஷ்ட பிரதேசபாடசாலைகளுக்குரிய பட்டியலில் தீவுப்பகுதிப் பாடசாலைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். தீவுப்பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்கள் எத்தகைய கஷ்டத்தை அனுபவிக்கிருர்கள் என்பதை உணர்ந்து தாங்கள் பட்டியலைப் பூர்த்தி செய்வீர்கள் என்று நம்புகிறோம்.

தீவுப்பகுதியின் ஆசிரியர்கள் பலர் வெளி மாகாணங்களுக்கு இட மாற்றஞ் செய்யப்பட இருக்கிருர்கள் என அறிகிறோம். ஆனல் அதே நேரத்தில் கடந்த பல வருடங்களாக தீவுப்பகுதியில் ஆசிரியர்பற்ருக்குறை நிலவி வருகிறது என்பதை தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம். முதலில் காலியிடங்களை நிரப்பி விட்டு பின்னர் இடமாற்றம் செய்ய வேண்டியவர்களை இட மாற்றம் செய்யுமாறு வேண்டுகிறோம்'

இத்தகைய மகஜர் ஒன்றை தீவுப்பகுதி ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சருக்கும் அதன் பிரதியை வடமாநில வித்தியாதிபதிக்கும் அனுப்பிவைத்துள்ளது.

தினைப்போல கைது செய்துள்ளனர். கடத்தல் சம்பவத்தை நேரில் கண்டதாகக் கருதப்படும் ஒரு பெண் உட்

## 'திட்டத்தை செயல்படுத்துக'

ஊரதீவு, செவ்வாய்

"காரைநகரில் கடல்நீர் உட்புகும் இடங்களைச் சுற்றி வரம்புகள் கட்டி மழை நீரைத் தேக்குவதற்குரிய திட்டம் ஒன்றுக்கு யாழ்ப்பாண மாவட்ட முன்னுள் அரசாங்க அதிபர் திரு. வேரிணன் அபயசேகரா அங்கீகாரம் அளித்திருந்தார். ஆனல் இதுவரை எந்தவிதமான செயல் திட்டங்களும் இடம்பெறவில்லை. இவ்விடயத்தைச் சோரவிடாது வேண்டிய நடவடிக்கையை எடுக்கவும்."

இவ்வாறு கூறும் கடிதம் ஒன்றை காரைநகர் பொது நல சேவா சங்கத்தினர் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ளனர்.

— —

## அரசாங்கத்தின் குறிக்கோள் பற்றி உதவி அமைச்சர்

மாத்தறை, செவ்வாய்

"மக்களின் விருப்பப்படி நாட்டை ஆளுவதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும்."

மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் உதவிக் கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சாதாரண மக்களுக்கு உதவ அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இதன்பொருட்டு நகரங்களிலும் பார்க்க கிராமங்களில் கைத்தொழில்களை நிறுவுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

மாத்தறை கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. மாத்தறைக் கிராமப் பகுதியின் குறைபாடுகள் பற்றியும், ஐக்கிய முன்னணியின் திட்டங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

திரு. எச் ரணதுங்கா, திரு. பி. பி. பியசேன, திரு. பி. ஏ. அமரசேன உட்படப் பலர் கூட்டத்தில் உரையாற்றினர்.

னர்: காப்பாளர்கள்: செல்வன் செ. சிவனடியான், வி. சிவலோகநாதன், தலைவர்கள்: க. தியாகராசா; பூலோகசுந்தரம்பிள்ளை, செயலாளர்கள்: த. கணேசன்; அ. இராசகோபால், பொருளாளர்: த. கயிலாயநாதன், பரிசோதகர்: க. பகரசிங்கம், விழா இயக்குனர் சு. பாலசிங்கம், போட்டிப் பொறுப்பாளர்: சி. செந்தூர்ராசா.

— —

## ஓய்வுபெற்ருர்

எழுதுமட்டுவாள், செவ்

கைதடி ஆயுள்வேதக் கல்லூரிக் கட்டிடத்தில் கட்டிடத் திணைக்கள நெடுஞ்சாலைப் பிரிவுப் பரிசோதகராக கடமை புரிந்தவரும் இலங்கையின் பல பாகங்களிலும் மேற்பார்வையாளராகக்கடமைபுரிந்தவருமான திரு எஸ். பாலசுப்பிரமணியம் 55 வயதில் ஓய்வுபெறுகிருர் இதனையொட்டி இவருக்கு கைதடி கட்டிட நெடுஞ்சாலைத் தொழிலாளர்கள் ஒரு பிரிவு பசார விழா நடத்தினர்.

— —

பேராதனைப் பல்கலைக்கழக

## புதிய மாணவர்கள் 12-ல் வந்துசேர்க

பேராதனை, செவ்

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வகுப்புக்கள் இம்மாதம் 14.ந் திகதி ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மாணவர்கள் விடுதிகளுக்கு இம்மாதம் 12-ந் திகதி மாலைக்குள் வந்து சேர்ந்துவிடவேண்டுமென பேராதனை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஈ. ஓ. ஈ பெரேரா மாணவர்களைக் கேட்டுள்ளார்.

## பெற்ருேர் ஆசிரியர் சங்க கூட்டம்

ஆனைக்கோட்டை, செவ்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் பெற்ருேர்ஆசிரியர் சங்கக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு ஆசிரியர்கள் பெற்ருேர்கள் பலரும் சமூகமளித்தனர். பெற்ருேர் தங்கள் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக ஆசிரியர்களோடு ஒத்துழைக்கவேண்டும் எனப் பெற்ருேர் ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

தங்களின் நயத்தின் பொருட்டு மாத்திரமன்றி, பிறர்நயத்தின் பொருட்டும் பிரயாசைப்படுகின்றவர்களே உத்தமர். — நாவலர்.

ஈழநாடு
Eelanadu Independent Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna; Telephone: 889;

சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 24-ந் திகதி (9-12-70)

## பிராந்திய ஒத்துழைப்பு

'காமன்வெல்த்தை' ஓர் அடிப்படையாக வைத்து பிராந்திய ஒத்துழைப்புக்கு வழிவகுக்கும் தீர்மானம் ஒன்றை ஜனவரி மாதம் சிங்கப்பூரில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமமந்திரிகளின் மகாநாட்டில் இலங்கை கொண்டுவரவிருப்பதாகவும் இத்தீர்மானத்துக்கு இதர பல நாடுகளும் ஆதரவு தெரிவித்திருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. பிராந்திய ஒத்துழைப்பு பற்றிப் பலதடவைகளிலும் பலரும் பேசிவந்திருக்கும் பழைய விஷயந்தான். இதுவரை இந்த முயற்சி செயற்படவில்லை. காமன்வெல்த்தை அடிப்படையாகக் கொண்டு பிராந்திய ஒத்துழைப்புக்கு வழிகாண்பது நல்ல முயற்சி.

காமன்வெல்த் என்றால் பொதுச்செல்வம் என்பது கருத்து, சர்வதேசப்பிரச்னைகளில் காமன்வெல்த்தில் அங்கம்வகிக்கும் நாடுகளுக்கிடையில் அபிப்பிராய பேதங்கள் இருப்பது உண்மையே. ஜனவரியில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கூட ரொடீஷியா விவகாரம், தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் ஆயுதங்களை பிரிட்டன் விற்பனைசெய்வதென்ற பிரச்னைகள் பெரும் புயலைக் கிளப்பக்கூடும். என்றாலும் காமன்வெல்த் ஒற்றுமை சிதறடிக்கப்பட்டுவிடுமென எதிர்பார்ப்பதற்கில்லை. சர்வதேசப் பிரச்னைகளில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காமன்வெல்த் ஒற்றுமையைப் பாதிக்காமலிருக்கவும் 'காமன்வெல்த்' என்ற குடும்ப ஒற்றுமையின் அடிப்படையில் பிராந்திய ஒத்துழைப்புக்கு வழிவகுப்பது வரவேற்கக்கூடிய முயற்சி.

காமன்வெல்த்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பிராந்தியத்திலுமுள்ள நாடுகளும் தங்களுக்கிடையில் வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்புக்கு வழிசெய்துகொள்வது கஷ்டமான காரியமாக இருக்காது. ஒரு பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கிடையில் ஏற்படும் வர்த்தக, பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு இதர பிராந்தியங்களிலுள்ள நாடுகளுடன் பின்னர் விஸ்தரித்துக் கொள்ள வாய்ப்பேற்படும். காமன்வெல்த்தில் அங்கம்வகிக்கும் நாடுகளுக்கிடையில் ஏற்படும் ஒத்துழைப்பு பின்னர் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்காத நாடுகளுடனும் விஸ்தரித்துக் கொள்ள வாய்ப்பேற்படும்.

வர்த்தக, பொருளாதார ஒத்துழைப்பு ஏற்பட்டால் நாடுகளுக்கிடையில் ஏற்படும் சிறு சிறு பூசல்களும் பிரச்னைகளும் நீங்கி அமைதி நிலவவும் பொருளாதார சுபீட்சம் ஏற்படவும் வழிபிறக்குமென எதிர்பார்க்கலாம்.

## படகுச் சேவை

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுவரும் பாதை சேவை, படகுச்சேவைகளை உடனடியாகத் தேசியமயமாக்க வேண்டுமென்று ... பொதுமக்களும் அந்தச் சேவை மக்களுக்குப்பயன்படுவதென்பதை உணர்ந்து நடந்துகொண்டால் நிச்சயம் அதனால் நன்மை கிடைக்கும்.

யாழ்ப்பாணக்குடா நாட்டில் நெடுந்தீவு, அனலை ...

### மாவை ஆலய விவகார வழக்கு

# 'சமரக்கொடி குழுவினர் கலைந்து செல்ல மறுத்தனர்'

## இன்ஸ்பெக்டர் ஹரத் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரம் கோவிலுக்கு முன்னால் நின்ற கூட்டத்தினரை கலைந்து செல்லும்படி பொலிசார் தெரிவித்தனர். புரட்சிவாத குழுவைச்சேர்ந்த எட்மன் சமரக்கொடி மறுப்புத் தெரிவித்தார். அவரின் குழுவில் சுமார் 50பேர் வந்திருந்தனர். ஏ. எஸ். பி. தவராசா குண்டாந்தடியடிப் பிரயோகம் செய்யும்படி உத்தரவிட்டார். பொலிசார் அதற்கு தயாரானபோது எட்மன் சமரக்கொடியைத் தவிர மற்றும் எல்லாரும் ஓடிவிட்டனர்; அதன்பின் எட்மனும் அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

மாவிட்டபுரம் ஆதீன கர்த்தா மீதான வழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஹெரத் மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு என். வைத்திலிங்கம் முன்னிலையில் ஆரம்பமானது.

மாவிட்டபுரம் கோவிலுக்குச் செல்வோரைத் தடுக்கக்கூடாதென ஆதீன கர்த்தாவான துரைச்சாமிக் குருக்களையும் சி. சுந்தரலிங்கத்தையும் தடைசெய்யுமாறு கோரி அட்டோர்ணி ஜெனரல் தாக்கல் செய்த மனு விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

மனுதார் சார்பில் அட்வகேட் எல். டி. குருசாமி புரக்டர் என். கனகரத்தினத் ...

அப்படியான ஒரு முறைப்பாட்டின் பேரில் நான் மல்லாகம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் 2-ம் எதிர் மனுதாரருக்கு எதிராக ஒருவழக்கை தாக்கல் செய்தேன். இவ்வழக்கு சமூக ஏற்றதாழ்வு ஒழிப்பு சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் அவர் குற்றவாளியானார். பின் அவர் சுப்பிரீம் கோட்டில் அப்பீல் செய்தபோது அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

2-ம் எதிர் மனுதார் இவ்வழக்கில் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சாட்சியமளித்தபோது நான் அங்கிருந்தேன், சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவர்களென கூறப்படுபவர்களை தடுக்கவில்லை என 2-ம் எதிர்மனுதார் கோர்ட்டில் மறுக்கவில்லை. ஜூலை 1-ம் திகதி கொடியேற்ற வைபவம் நடைபெற்றது. அன்று கதவு திறக்கப்பட்டிருந்தது 15-ம் திகதிவரை கதவுகள் திறக்கப்பட்டிருந்தன 16-ம் திகதி கதவுகள் மூடப்பட்டிருப்பதைக் கண்டேன் கதவில் சங்கிலியும் பூட்டும் போடப்பட்டிருந்தது வழிபடுவோர் வந்து வெளியில் நின்றனர். கோவில் உள்மண்டபத்திலும் ஆட்கள் காணப்பட்டனர். அப்போது நான் தான் பொறுப்பாக இருந்தேன். 2-ம் எதிர்மனுதார், தொண்டர்களுடன் காணப்பட்டார்.

2-ம் எதிர்மனுதார் அச்சமயம் வெளிமண்டபத்திற்குள் தண்ணீர் பாய்ச்சும்படி தெரிவித்தார். அங்குள்ளவர்கள் வெளியில் சென்றனர். 17-ம் திகதி வெளிமண்டபக் கம்பியும் தடையில் போடப்பட்டிருந்தது அன்று சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் எனக்கூறப்படுவோர் வெளியில் நின்றனர். 23-ம் திகதி நான் அங்கிருந்து நிலைமையை அவதானித்தேன்.

தொண்டர்கள் ஒரு பக்கத்திலும், சிறுபான்மைச் சமூகத்தைச்சேர்ந்த வழிபடுவோர் மறுபக்கத்திலுமிருந்தனர். நான் நிலைமைபற்றி 2-ம் எதிர் மனுதாருடன் கதைத்தேன் அச்சமயம் திடீரென அந்த சம்பவம் ஏற்பட்டது. தொண்டர்களிடமோ, சத்தியாக்கிரகிகளிடமோ ஆயுதம் இருந்தது பற்றி அந்தச்சமயம் நான் கவனிக்கவில்லை. 2-ம் எதிர் மனுதாரான சுந்தரலிங்கத்திடம் ஒரு கைப்பிரம்பு இருந்தது. இருசாராருக்குமிடையில் திடீரென கலவரம் ஏற்பட்டது அப்போது பொலிசார் தலையிட்டு, இருபகுதியினரையும் வெவ்வேறாக்கினார்கள். சில தொண்டர்கள் ஓடிவிட்டனர். சில தொண்டர்கள் உள்ளே இருந்தனர். சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எனக்கூறப்படுவோர் மறுபக்கத்திற்கு சென்றனர்.

கோயிலுக்குள்ளே இருந்த தொண்டர்கள் கற்களை வீச ஆரம்பித்தனர். ஏ. எஸ். பி தவராசா தடியடிப் பிரயோகம் நடத்தும்படி உத்தரவிட்டார். பொலிஸார் கோயிலுக்குள்ளே சென்றனர். கோயிலுக்குள்ளே கைக்குண்டு, 3 இரும்புக்கம்பிகள், பொல்லுகள் மீளாய்த்தாள் பக்கட்கள் பெற்றோல் ... கைப்பற்றப்பட்டது. இச்சம்பவத்தின் பின் கோயில் பூசை நடைபெறவில்லை,

சம்பவத்தின்பின் பொலிஸபலம் அதிகரிக்கப்பட்டது. கோயிலில் நின்றவர்களை பொலிசார் கலைந்துசெல்லும்படி தெரிவித்தனர்

23-ந் தேதி 100க்குமேற்பட்ட வழிபடுவோர் கோவிலில் காணப்பட்டனர். மாவிட்டபுரத்தில் உள்ள பொலிஸ் போஸ்டில் சுமார் 100 பொலிசார் வரை கடமையாற்றினர்கள், இவர்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களிலிருந்து வரவழைக்கப்பட்டனர். வருடாந்த உற்சவம் 26-ந் திகதி முடிவடைந்தது. அதன்பின் அங்கிருந்த நிலைமை மாறியது.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## வீடமைப்புக்கு 4 கோடி ரூபாய்

கோட்டை செவ்வாய்

வீடமைப்புக்கு 4 கோடி ரூபா செலவு செய்யப்படும் என வீடமைப்பு அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் நேற்றுமுன்தினம் ஆட்சிமன்றத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் முன்னைய அரசாங்கம் வீடமைப்புக்குப் பணம் ஒதுக்குதலில் ஒரு பகுதி மக்களை ஒதுக்கிவிட்டது. [illegible]த்திய, உயர்வகுப்பினருக்கும் செல்வந்தர்களுக்குமே அது 90 வீதம் உதவி செய்துள்ளது.

தற்போது நாட்டிலுள்ள வீட்டுப்பிரச்னையைத் தீர்க்க ...

யாழ். இந்துக்கல்லூரியில்

## அறுபது வயது இளைஞருக்கு பிரியாவிடை

அறுபது வயதுக் கிழவருக்கு விழா; இல்லை, தப்பு' அறுபது வயதுக் குமரனுக்குத்தான் விழா.

என்ன? இது எங்கே நடந்தது என்று வியக்காதீர்கள். யாழ். இந்துக்கல்லூரியில் நேற்று முன்தினம் இவ்விழா நடைபெற்றது.

அந்த அறுபது வயதுக் கிழவர் யாருமல்ல. யாழ்ப்பாண விளையாட்டு இரசிகர்களுக்கு நன்கு தெரிந்த திரு. தியாகராஜா மாஸ்டர்தான்.

யாழ்ப்பாண இந்துக்கல்லூரி தொடர்ந்து 17 ஆண்டுகளுக்கு உதைபந்தாட்டத்தில் சாம்பியன் பட்டம் பெறுவதற்குக் கிரகபலன் காரணமென்று சொல்லிவிட முடியாது. திரு தியாகராஜாவின் முயற்சிதான் காரணமென்பதை அழுத்தந்திருத்தமாக திரு. ஜே. ஏ. சுப்பிரமணியம் என்னும் முன்னாள் ஆசிரியர் கூறியபோது முக்கியஸ்தர்கள் வீற்றிருந்த இடத்தைப் பார்த்தேன்

பூரண ஆங்கில உடையில் கம்பீரமாக வீற்றிருந்த தியாகராஜாவை நிமிர்ந்து பார்க்கத்தான் தோன்றியது விளையாட்டுத்துறையில் யாழ் இந்துக்கல்லூரி முன்னேறுவதற்குத் தன் 32 வருடகால சேவையை அர்ப்பணித்த தியாகராஜாவின் குணநலன்களை ஆசிரியர்கள் கூறியபோது, யாழ்ப்பாண இந்துக்கல்லூரியின் வளர்ச்சியில் இந்தத் தனிமனித சக்தி எவ்வளவுதூரம் பயன்பட்டிருக்கிறது என்பதை ஓரளவுக்குப் புரிந்துகொண்டேன்

நாம் எத்தனைதான் சி. சி. எஸ் என்ஜினியர்கள், டாக்டருடன் இந்துக்கல்லூரியின் சகாப்தம் ஒன்று உருவாகி நிறைவுபெறுகிறது என்று கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய திரு. வி. சிவசுப்பிரமணியம் ஆசிரியர் குறிப்பிட்டார். அந்தக் கூற்றை முன்னாள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு. சுப்பிரமணியம் (ஓய்வுபெற்றவர்) தற்போதைய அதிபர் திரு. சபாரத்தினம் ஆகியோரின் பேச்சுக்கள் வலுப்படுத்தின.

எதையும் சிரித்துச் சமாளிக்கின்ற பண்புதான் தியாகராஜாவினுடையது. எந்தப் பிணக்குகளையும் மெதுவாகத் தீர்த்துக்கொண்டு எவருக்கும் தொந்தரவில்லாமல் விலகிக்கொள்ளும் பண்பாடு தனியுடைமையாக உடைய இவர் தொடர்ந்து அந்தப் பண்பாட்டுடன் வாழப் பிரார்த்தித்தார் திரு. இ. மகாதேவன்

வட இந்திய சினிமா நடிகரான அசோக்குமார் ஏறத்தாழ அறுபது வயதுடையவரானாலும் இன்றைக்கும் நிரந்தர கதாநாயகனாக இருப்பதுபோல் திரு. தியாகராஜா விளங்குகிறார் என்பதைச் சுட்டிக்காட்டிய திரு. மகாலிங்கசிவம், தான் இந்துக்கல்லூரியில் பயிற்சிக்கு வந்தபோது தன்னை முதன் முதல் நண்பனாக்கியவர் தியாகராஜாதான் என்று குறிப்பிட்டு அவரது மனப்பான்மையைப் புலப்படுத்தினார். திரு. கார்த்திகேசன் 1941ம் ஆண்டுக்கும் இன்றைக்குமிடையில் அதிக வித்தியாசத்தை நான் காணவில்லையென்று திரு. தியாகராஜாவின் உடல் நலத்தைப் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுவரும் பாதை சேவை. படகுச்சேவைகளை உடனடியாகத் தேசியமயமாக்க வேண்டுமென்று தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் கோரிக்கை விடுத்திருக்கிறார். நெடுஞ்சாலை அமைச்சர் இந்தக் கோரிக்கையைப்பரிசீலனை செய்து இதன் அவசியத்தைக் கருதி துரிதநடவடிக்கை எடுக்கவேண்டும்.

படகுச் சேவையையும் பாதைச் சேவையையும் தேசிய மயமாக்கிவிட்டால் போக்கு வரத்துப் பிரச்னை தீர்ந்துவிடுமா? என்றுசிலர் கேட்கக் கூடும். பஸ் போக்கு வரத்துச் சேவை தேசிய மயமாக்கப்பட்டும் பிரயாணக்கஷ்டம் தீர்ந்துவிடவில்லையே என்று அவர்கள் இதற்கு ஆதாரம் காட்டவும் முன்வரக்கூடும்.

தேசியமயமாக்கப்பட்ட சேவைகளில் கடமையாற்றுபவர்களும் சேவை மக்களுக்குப்பயன்படுவதென்பதை உணர்ந்து நடந்துகொண்டால் நிச்சயம் அதனால் நன்மை கிடைக்கும்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவுபோன்ற சிறிய தீவுகளில் வாழும் மக்கள் அனுபவிக்கும்பிரயாணக் கஷ்டங்கள்பற்றி இனியும் எதுவும் சொல்ல வேண்டிய அவசியமில்லை; சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையுமில்லை. ஆட்சிமன்றத்தில்மட்டுமல்ல அமைச்சர்கள் பலருக்கும் இந்தப் பிரயாணக் கஷ்டங்கள் பற்றி அனுப்பப்பட்டமகஜர்களே அவற்றைவிளக்கும்.

படகுச் சேவைகளையும் பாதைச் சேவைகளையும் தேசியமயமாக்கினாலும்சரி வேறு என்னசெய்தாலும் சரி, சந்திரனுக்குப் பிரயாணம் செய்யும் இந்த யுகத்தில் சிறிய கடல் தாண்டிச் செல்லமுடியாமலிருக்கும் நிலைமாறினால் போதும்.

ரல் தாக்கல் செய்த மனு விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

மனுதார் சார்பில் அட்வகேட் எல் டி. குருசாமி புரக்டர் எஸ், கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார், 1ம், 2ம், எதிர்மனுதார் சார்பில் அட்வகேட் சிசுந்தரலிங்கம் ஆஜரானார். இன்ஸ்பெக்டர்ஹெரத்சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது: முதல் 15 நாட்களுக்கும்தடைகள் எதுவும் போடப்படவில்லை இரு வாசல்களிலும் தொண்டர்கள் நின்றனர். வழிபட வந்தோர்கள்உள்ளே செல்ல முயற்சித்தனர். அவர்களில் சிலர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். சிலர் வெளியே தள்ளப்பட்டனர். தொண்டர்கள் வழிபட வந்தோர்களில் சிறுபான்மை சமுகத்தை சேர்ந்தவர்களையும் மற்றவர்களையும் அடையாளம் கண்டனர். 68-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் எதிர் மனுதார் தீவிரமாக தொண்டர்களை மேற்பார்வை செய்துவந்தார், சிறுபான்மை சமுகத்தை சேர்ந்தவர்களென்று கூறப்படுபவர்களிடமிருந்து எனக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. சிலர் குறிப்பாக 2-ம் எதிர் மனுதாருக்கு எதிராக புகார் செய்தனர் 1-ம் எதிர் மனுதாருக்கெதிராகவும் புகார் செய்தனர்

2-ம் எதிர்மனுதார் அச் சமயம் வெளிமண்டபத்திற்குள் தண்ணீர் பாய்ச்சும்படி தெரிவித்தார். அங்குள்ளவர்கள் வெளியில் சென்றனர். 17-ம் தி[illegible] வெளிமண்டபத்திற்குள் தண்ணீர் பாய்ச்சப்பட்டது இச்சமயத்தில் எனக்குபுகார் செய்யப்பட்டது. 23-ம் தேதி கிழக்கு பக்கவாசலில் தடை போடப்பட்டிருந்தது. முன்

சென்றனர். கோயிலுக்குள்ளே கைக்குண்டு, 3 இரும்புக்கம்பிகள், பொல்லுகள் மிளகாய்த்தூள் பக்கட்கள் பெற்ரோல் போத்தல்கள், மண் அடைக்கப்பட்ட போத்தல்கள் காணப்பட்டன, இச்சம்பவத்தில் 3 பேர் காயமடைந்தனர். இச்சம்பவம்பற்றி தவராசாவிற்குத் தெரிவிக்

...ளருக்கும் செல்வந்தர்களுக்குமே அது 90 வீதம் உதவி செய்துள்ளது.

தற்போது நாட்டிலுள்ள வீட்டுப்பிரச்னையைத் தீர்க்க ஒன்[illegible]து லட்சத்து நாற்பத்தையாயிரம் விடுகள் தேவைப்படுகின்றன. அடுத்தாண்டிற்குள் 5000 மாடி வீடுகள் நிறுவப்படவுள்ளன.

...பட்டிருக்கிறது என்பதை ஓரளவுக்குப் புரிந்துகொண்டேன்

நாம் எத்தனைதான் சி. சி. எஸ் என்ஜினியர்கள், டாக்டர்கள் ஆகியோரை உருவாக்கியபோதிலும், பொது மக்கள் மத்தியில் இந்துக் கல்லூரியின் செல்வாக்குப் பெருகுவதற்கு விளையாட்டுத்துறைதானே காரணம் ஆகியுள்ளதென்று ஆசிரியர் ஒருவர் சுட்டிககாட்டியதில் உண்மையுண்டு.

திரு தியாகராஜா மாஸ்டர் 1941ம் ஆண்டுக்கும் இன்றைக்குமிடையில் அதிக வித்தியாசத்தை நான் காணவில்லையென்று திரு. தியாகராஜாவின் உடல் நலத்தைப் பாராட்டினார்.

பிரியாவிடைக் கூட்டத்தில் வெள்ளிக் கிண்ணம் ஒன்றை திரு. தியாகராஜாவுக்கு நினைவுச் சின்னமாக வழங்கினர்.

திரு. தியாகராஜா தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

—ஈரு

# 'நாம்தமிழர்' வானொலியின் வாய் மூடப்படுமாம்

## 'தவஸ்' பத்திரிகை செய்தி

கோட்டை, செவ்

'நாம் தமிழர்' பாசறை என விளங்கும் தமிழ் நாடு (மதராஸ்) திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலிருந்து ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் இலங்கை வானொலி நிகழ்ச்சியைவிடதெளிவாக வடக்கு கிழக்குமாகாணங்களில்கேட்கப்படுவது அரசாங்கத்துக்குத் தெரியவந்துள்ளதாம்.

இந்நிகழ்ச்சிகள் இலங்கையில் நாம் தமிழர் இயக்கங்களுக்குத் தீவிரமாக உதவியிருப்பதினால். மாங்குளத்திலும் அம்பாறையிலும் புதிதாக மிகச் சக்திவாய்ந்த இரு ஒலிபரப்பு நிலையங்களை அரசாங்கம் நிறுவப் போகின்றதாம்.

இச்செய்தியை 'தவஸ்' பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது. 'அப்பி தெமலுங்கே குவன்விதுலி கட்ட வஹயி' (நாம் தமிழரின் வானொலி வாய் மூடப்படும்) என்று முன்பக்கத்தில் எட்டுப்பத்திகளில் கொட்டை எழுத்து தலைப்புடன் இச்செய்தி முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் சிற்றலைகள் வாயிலாக ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தெளிவாகக் கேட்கமுடிகிறதில்லை. மதராஸ், திருச்சிராப்பள்ளி வானொலிகளினால் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் இப்பகுதி மக்களால் தெளிவாகக் கேட்கமுடிகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்கள் இலங்கை வானொலியில் தெளிவற்ற நிகழ்ச்சிகளைக் கேட்பதைவிட மதராஸ், திருச்சிராப்பள்ளியிலிருந்து ஒலிபரப்பாகும் தெளிவான நிகழ்ச்சிகளைக் கேட்பதில் பழகிப்போய் இருக்கிறார்கள்

இதனால் இயற்கையாகவே 'நாம் தமிழர்' இயக்கத்துக்கு நல்ல பிரசாரமும் வசதியும் கிடைத்திருக்கின்றது என்று ஒலிபரப்புக்கூட்டுத்தாபன அதிபர் திரு. சுசில் முனசிங்கா தெரிவித்தார்

புதிய ஒலிபரப்பு நிலையங்கள் இரண்டு நிறுவப்பட்ட பின்னர் இப்பகுதிகளில் வானொலி பிரியர்கள் மத்தியில் இலங்கை வானொலியைப்பிரபல்யப்படுத்த முடியும், இதன் மூலம் மதராஸ் திருச்சிராப்பள்ளி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகும் நாம் தமிழர் நிகழ்ச்சிகளைப் பின்னடையச் செய்ய முடியும்

முன்னைய அரசு பதவியிலிருந்த காலத்தில் வடக்குக் கரைப் பகுதியில் கள்ள வானொலி பிரசாரப் பகுதி ஒன்று இருப்பதாக பொலிசாருக்குத் தகவல் கிடைத்திருந்தது

இவ்வாறு 'தவஸ்' பத்திரிகைச் செய்தி கூறுகின்றது

......

## "80 பிரிவு ஆசிரியரை ஐந்து பிரிவாக்குக"

பருத்தித்துறை, செவ்வாய்

'இன்று இலங்கையில் உள்ள ஆசிரியர் 80 வகையினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இவர்களை ஐந்து வகையாகக் குறைக்கும் ஒரு திட்டத்தை நாம் உருவாக்கியுள்ளோம். ஒரு படியில் உள்ள ஓர் ஆசிரியர் அடுத்த படிக்கு உயர்த்தப்படுவதற்காக எவ்வித தகைமைகளைப் பெற வேண்டுமென்பது பற்றியும் ஆலோசனை கூறுவோம்''

இவ்வாறு குறிப்பிடும் ஒரு மகஜரை ஈழத்துப் பண்டிதர் சங்கம் சம்பளக் கமிஷனிடம் சமர்ப்பித்துள்ளது. மிக விரைவில் சம்பளக்கமிஷன் முன் சாட்சியமளிக்கவிருக்கும் மேற்படி சங்கத் தூதுக் கோஷ்டியொன்று இத்திட்டத்தை அங்கு சமர்ப்பிப்பதுடன் தற்போது தலைமையாசிரியர் என்ற பதவிப் பெயரை அதிபர் என மாற்றுமாறு கோரவிருக்கிறது. மேலும் கனிஷ்ட வித்தியாலய ஆசிரியருக்கும் மாணவர் தொகைக்கேற்ப விசேட பதவிகள் வழங்க வேண்டுமென்றும் அவ்வித்தியாலயங்களிலும் தாய்மொழி, சமயம், இரண்டாம் மொழி ஆகியவற்றுக்குப் பகுதித் தலைவர்கள் நியமிக்கப்படல் வேண்டுமென்றும் தூதுகோஷ்டி வலியுறுத்துமென சங்கச் செயலாளர் திரு. த. கிருஷ்ணபிள்ளை கூறினார்.

# வேலைக்காக எம். பி.க்கள் உதவியை நாடுதல் தவறு

— உதவியமைச்சர்

அம்பாறை, செவ்.

'நாட்டின் முக்கிய பிரச்னைகளில் ஒன்றான வேலையில்லாப்பிரச்னையைத் தீர்க்க சரியான தொருதிட்டத்தை அரசாங்கம் வகுக்க வேண்டும் ஒரு சில வெற்றிடங்களுக்கு ஆயிரக்கணக்கானோர் விண்ணப்பிக்கிறார்கள் அவர்களில் தகுதியில்லாதவர்கள் எம். பி க்களின் உதவியை நாடுகிறார்கள் இது சரியல்ல நியாயமான முறையில் யாவருக்கும் வேலை வாய்ப்பளிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்'

அம்பாறை சத்ததீஸ கனிஷ்ட வித்தியாலயத்தில் தனக்களிக்கப்பட்டவரவேற்பின் போது உரையாற்றிய நீர்ப்பாசன மின்சார அமைச்சின் உதவியமைச்சர் திரு செனரத் சோமரத்ன மேற்கண்டவாறுகூறினார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- வேலையற்ற இளைஞர்கள் இன்று இந்நாட்டில் ஒரு பெரும் பிரச்னையாக உள்ளார்கள் இவ்வேலையில்லாப் பிரச்னை உடனடியாகத் தீர்வுகாணக் கூடியதொன்றல்ல திட்ட அமைச்சின் ஒரு திட்டத்தின்படி அடுத்தாண்டு முதற்பகுதியில் 100,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்படவிருக்கிறது ஒவ்வொரு காரியாதிகாரிபிரிவிலிருந்தும் 100அல்லது150பேருக்கு வேலைவாய்ப்பளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அம்பாறை அரசாங்க அதிபர் திரு. பிராட்மன் வீரக்கோன் திரு தி டபிள்யூ விஜிபிரட் திருமதி பிரேமா ஹேவசமஉட்படப் பலர் உரையாற்றினர்.

கோட்டை, திங்கள்

தனிப்பட்ட முறையிலும் பொதுமுறையிலும் பனை பயிரிடுவதிலுள்ள பிரச்னைகள் பனை ஆராய்ச்சி நிறுவனமொன்று நிறுவுவதிலுள்ள பொருளாதார விடயம் ஆகியன குறித்துஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தோட்டத் தொழில் அமைச்சர் ஒரு சபையை நிறுவியுள்ளார்.

# ராஜாஜிக்கு 93 வயது

சென்னை,டிச 8

இந்தியாவின் முதுபெரும் ராஜதந்திரியான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் இன்று தமது 93வது பிறந்ததினத்தை மிக அமைதியாகக் கொண்டாடினார்.

தமிழ்நாடு முதல்வர் திரு மு கருணாநிதி, கல்வி அமைச்சர் திரு இரா நெடுஞ்செழியன் ஆகிய இருவரும் இன்று காலையில் அவர் இல்லத்திற்குச் சென்று மலர்மாலை அணிவித்து வாழ்த்துக்கூறினார்கள் தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங்கும், அவரது துணைவியாரும் ராஜாஜியை அவரது இல்லத்தில் சந்தித்து மாலை அணிவித்து மரியாதை தெரிவித்துக் கொண்டனர்.

முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலமும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். ராஜாஜியை இன்று காலையில் சந்தித்த பத்திரிகை நிருபர்கள் ஏதாவது செய்தியுண்டா என்று கேட்டபொழுது, என து நீண்ட ஆயுளே உங்களுக்கொரு செய்திதான் என்று அவர் பதிலளித்தார் நான் நீடித்து வாழ்வது நாட்டுக்கு பயனளிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# 'சமுதாயவாழ்வில்பெண்கள் ஈடுபட வேண்டும்'

பருத்தித்துறை, செவ்.

''பெண்களின் உலகம் அடுக்களையை எல்லையாகக் கொண்டதல்லஇன்றுபொதுவாக மேல்நாடுகளும் குறிப்பாக சோஷலிச நாடுகளும் பெண்ணினத்திற்கு உரிய மதிப்பையும் முக்கியத்துவத்தையும் அளித்துள்ளமையால் தான் அந்நாடுகள் பல தரப்பட்ட முன்னேற்றங்களைக் கண்டுள்ளன மேலும் பெண்கள் ஒரு இலட்சியத்துடன் வாழப் பழகிக்கொள்ளவேண்டும்''.

இவ்வாறு கம்யூனிஸ்ட் பிரமுகரான திரு. பொன். குமாரசாமி நேற்று முன் தினம் தம்பசட்டி மாதர் சங்கக் கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார் திருமதி எஸ். ஸ்ரீபூசியஸ் தலைமையில் நடந்த கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'பெண்கள் தங்கள் குடும்பத்தின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யவும் பழகிக்கொள்ள வேண்டும் அதே நேரத்தில் சமுதாயத் தேவைகளைப் பூர்த்திசெய்ய சமுதாய வாழ்விலும் பங்கு கொள்ள வேண்டும் எமது நாட்டின் பிரதம அமைச்சர் பெண் என்ற முறையில் நமது மாதர் சங்கங்கள் தங்கள் கோரிக்கைகளை அவர் முன்வைத்துப் பேட்டிகாணுவதும் வரவேற்கத்தக்கது மேல் நாடுகளில் மாதர்கள் சாதித்துள்ள சாதனைகளை எமது பெண்கள் அறிந்திருப்பதும் சிறந்தது',

திருக்கேதீஸ்வரம்

# புனருத்தாரண பணிகளுக்கு உதவக் கோரிக்கை

கொழும்பு,செவ்

திருக்கேதீச்சர ஆலய புனருத்தாரணத்தின் முக்கிய கட்டமாகிய பாலஸ்தாபன வேலைகள் வருகிற பங்குனியில் தொடங்க விருப்பதால் சைவாபிமானிகள் எல்லோரும் தம்மாலியன்ற உதவிகளைச் செய்ய வேண்டுமென திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபையின் தலைவர் திரு ச சோமசுந்தரம் அண்மையில் நடைபெற்ற மன்னார் பிரதேசக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில்வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மன்னார் பிரதேசக் குழுவின் தலைவராக அரசாங்க அதிபர் திரு ச கதிர்காமநாதனும், உப தலைவராக மேலதிகநீதிபதி திரு க வை. நவரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டனர் தலைவர் கதிர்காமநாதன் பேசுகையில் நாடெங்கிலும் பிரதேசக் குழுக்களை அமைப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார். உப-தலைவர் நவரத்தினம் பேசுகையில் மன்னார் பிரதேசக் குழு கோவில் நிர்வாகத்தில் தலையிடாது புனருத்தாரணவேலைகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதிலேயே முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

திருக்கேதீஸ்வர ஆலயம் பண்டைப் பெருமையை மீண்டும் பெற்று சைவமும் தமிழும் தழைத்தோங்க அருள்புரிய வேண்டுமென்றால் ஆலய சுற்று வட்டாரங்களில் தரிசாகக் கிடக்கும் நிலங்களை 'வண்டு பண் செய்யும் மாமலர்ப் பொழின் மஞ்ரை நடமிடும்' மாதோட்டங்களாக்க சைவ அன்பர்கள் முன்வர வேண்டுமென்று நீதிபதி நவரத்தினம் கூறினார். மன்னார் பிரதேசக் குழுவின் செயலாளராக திரு மூ சுப்பிரமணியமும், பொருளாளராக திரு. தி து சீனிவாசகமும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

# தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பத்திரிகை விநியோகிப்பதற்கும், பத்திரிகை மடிப்பதற்கும் சொந்த சயிக்கிள் வைத்திருக்கும். பையன்கள் தேவை. காரியாலயத்தில் வந்துசந்திக்கவும்.

பொதுமுகாமையாளர்,
'ஈழநாடு' லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org